ஜநவிநோதிநி.

Janabinodini.

A POPULAR MAGAZINE

OF

AMUSING AND INSTRUCTIVE INFORMATION
IN TAMIL.

(ILLUSTRATED.)

Vol. VIII.

Madras:
PUBLISHED BY THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR
LITERATURE SOCIETY, AND SOLD AT THEIR
DEPOSITORY, OLD COLLEGE.

பொருளடக்கம்.

	பக்கம்.
அவசியமான உழைப்பும் அவசியமில்லா உழைப்பும்.	82
அறிவின் பெருமையும் வித்தியாகர்வமும்	217
ஆபரணமிழத்தல்	72, 90, 204
உழைப்பின் சிறப்பு	58
கலியாணஞ் செய்துகொள்ளல்	138
காசிப்பட்டணத்தின் வரலாறு	112
கைகள்	239
கொடுமை	193
சக்கரவர்த்திப் பட்டத்தைப்பற்றிச் செய்த உபந்யாசம்.	17
சமாசாரம்	27, 54, 80, 131, 157, 175 209, 235, 285, 312
சம்பாஷணை	212
சஹாரா என்னும் வனாந்தரம்	33
சிறுவர்க்கான கதை	23, 48, 74, 116, 148, 177 206, 232, 277, 311
சுகாதாரவிஷயம்:—	
உணவுப்பொருள்கள்	302
எலும்புகளின் இயற்கையும் முதற்கருவிகளும்	45
கடைமொழி	306
தசைகளின் உறுப்பும் உபயோகமும்	70
நாடியியல்	110
மனிதர்களின் தேகக்கட்டு	4
ரத்தத்தின் உறுப்புகள்	145
செஞ்சிகோட்டையையும் தேசிங்குராஜாவையும் பற்றிய கதை	12
தக்காணத்துப் பூர்வகதைகள்	6, 36, 64, 100, 141, 167, 198, 222, 255, 294
தற்பயிற்சி	134
தேசபாஷா பத்திரிகைகள்	282

	பக்கம்.
நகரவாசமும் நாட்டுவாசமும்	60
நீதிநெறிப்பயிற்சி	93
நீதிமொழிகள்	309
நுட்பபுத்தியுள்ள நியாயாதிகாரி	188
நெப்பியர் துரையும் தொம்பர்வித்தைக்காரனும்	160
பயிர்த்தொழிலின் சீர்திருத்தம்	265
பலவிஷயத் திரட்டுகள்: *	
இஸ்பெஹான் நகரத்துக் காட்சி	55
எழுபுண்ணிய நகரங்கள்	1
சிங்கவேட்டை	29
தஞ்சமாநகரம்	237
நீக்குருவி	159
பார்லிமெண்டு சபை	287
மார்க்விஸ் அவ் ஸாலிஸ்பரி	211
லார்ட் லிட்டன்	185
ஜகந்நாதம்	81
ஸ்ரீநகரம்	133
பேராசை	163
மரியாதைகளைப்பற்றி	250, 288
மனதின் உறுப்புகள்	192
மனோபாவம் அல்லது உட்கருத்து	31
முதலும் வட்டியும்	242
மெய்யும் பொய்யும்	175
ருஷியதுருக்கர் யுத்தத்தின் லாபநஷ்டக்கணக்கு	284
வாழ்நாள் பேதாமையென்னும் பேதைமை	273
விடாமுயற்சியைப்பற்றி	86
வீண்வாதஞ்செய்பவர்	42, 68
வெறுப்பு	228
வைசூரி சாத்தியமான வியாதியா?	128, 150, 179

* இதற்கடியில் வரும் விஷயங்கள் படங்களோடு பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.



ENTRANCE TO THE PAGODA OF CONJEVERAM.

காஞ்சீபுரம்.

ஜநவிநோதிநி

இல. 1.] ஜனுவரி மீ 1877. [புஸ்த. VIII.

எழுபுண்ணியநகரங்கள்.

𑌅𑌯𑍋𑌧𑍍𑌯𑌾 𑌮𑌥𑍁𑌰𑌾 𑌮𑌾𑌯𑌾 𑌕𑌾𑌶𑍀 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀 𑌹𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌿𑌕𑌾।
𑌪𑍁𑌰𑍀 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌵𑌤𑍀 𑌚𑍈𑌵 𑌸𑌪𑍍𑌤𑍈𑌤𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑌾𑌯𑌿𑌕𑌾𑌃॥

என்று வடமொழியிற் சொல்லியிருக்கிறபடி இந்த இந்துஸ்தானத்தில் முத்திதரும்படியான நகரங்களென்று மிகப் புகழப்பட்ட புண்ணிய ஸ்தலங்கள் ஏழுண்டு.—அவை, அயோத்தி-மதுரை-மாயை-காசி-காஞ்சி-அவந்தி-துவாரகை என்பவைகள். இப்பெயர்களின் காரணமும் மகிமையுமான வரலாற்றை இதனடியில் சுருக்கமாய் எழுதுகின்றோம்:—

அயோத்தி என்பதற்கு எதிர்க்கக்கூடாதது என்று பொருள். இந்தப் பட்டணம் சூரியவமிசத்து முதலரசனான இக்ஷ்வாகு என்பவருக்குப் பிரமதேவனால் கொடுக்கப்பட்டது. எப்படிப்பட்ட சூராராலும் எதிர்க்கப்படாததென்கிற வெளிப்படையான காரணங்காட்டி, முக்காலமுமுணர்ந்த வசிஷ்டமாமுனிவரால் பாவங்களால் எதிர்க்கப்படாதது என்னும் உட்கருத்துகொண்டு இப்பெயரிடப்பட்டதென்கிறார்கள். ஏனெனில் ஸ்ரீ மகாவிஷ்ணு இந்தப் பட்டணத்தில் ஸ்ரீ ராமபிரானாக அவதரித்து மூவுலகங்களுக்குமுள்ள இடுக்கண்களைப் போக்கி அந்நகரத்திலுள்ள அனைவர்க்கும் நற்கதிகொடுத்தார் என்று இதற்கு விசேஷமகிமை சொல்லப்பட்டிருக்கிறது.

மதுரை என்பது வடக்கே யமுனையாற்றங்கரையிலே இருப்பது. இப்பெயரின் வெளிப்படையான காரணம், மது என்கிற அசுரனால் கொள்ளப்பட்ட இடம் என்பதாம். அது ஆதியில் காடாயிருந்தபோது மது என்னும் ஓரசுரன் அங்கே பரமசிவனைநோக்கித் தவஞ்செய்து ஒரு சூலாயுதம் பெற்று மேன்மையாய் வாழ்ந்திருந்தான். அவன் குமாரனான லவணாசுரன் என்பவன் அவ்விடத்

திலேயே இருந்து முனிவர்க்குத் துன்பஞ்செய்துவந்ததனால் ஸ்ரீராமருடைய தம்பியான சத்துருக்கனர் அங்குச்சென்று அவனைக் கொன்று முனிவர்கட்கெல்லாம் நன்மைசெய்து அம்முனிவர்களுடைய வேண்டுகோளின்படி அவ்வனத்தை அழித்து நகரமாக்கி மதுரை என்று பேரிட்டார். உட்கருத்து இன்பத்தைத்தருவதென்பது. இன்பமாவது மோக்ஷானந்தம் என்கிற பேரின்பம். இது மகாரிஷிகள் அனுக்கிரகித்தது. அன்றியும் கிருஷ்ணசுவாமி அங்கே அவதரித்து லோகங்களுக்கு மகா க்ஷேமத்தைச்செய்தார். இக்காரணங்களால் அது விசேஷ மகிமைபெற்றது.

மாயை என்பது ஹரித்துவாரம் என்கிற மகா க்ஷேத்திரம். ஹரியை அடையும்படியான வழி என்பது அதன் பொருள். ஹரியின் மாயையாலே உண்டாக்கப்பட்டதாகையால் மாயை என்னப்பட்டது. ஆதிகாலத்தில் மகா சக்தியுள்ளவனாயிருந்த மது என்னும் அசுரனை சம்ஹரித்ததனால் மதுசூதனன் என்கிற திருநாமத்தையடைந்த விஷ்ணு, அந்தஸ்தலத்தில் சான்னித்தியஞ்செய்திருக்கிறார். அந்த அசுரன் மரணகாலத்தில் இவரை லோககர்த்தா என்றறிந்து, இவ்விடம் மகா புண்ணியக்ஷேத்திரம் ஆகவேண்டுமென்று பிரார்த்திக்க, சுவாமி அப்படியே ஆகட்டுமென்று அங்கீகரித்து பட்டணமுண்டாக்கி, அதில் தாம் விசேஷசான்னித்தியம்பண்ணி அங்குள்ளார்க்கெல்லாம் ஞானத்தைப்போதித்துக் கடைத்தேற்றினதனால் அது மிகுந்த பெருமைபெற்றது. அங்கேதான் கங்காநதி முதலில் பூமியில் பிரவேசிக்கின்றது.

காசி என்பதற்குப் பிரகாசிப்பது என்பது பொருள். பிரகாசமாவது வெளித்தோற்றமேயல்ல, ஞானபிரகாசமாம். அங்கே பரமசிவன் விசேஷ சான்னித்தியஞ்செய்து இயற்கையில் பரிசுத்தமான கங்கைக்கு இன்னம் விசேஷமகிமையைக் கொடுத்து, அங்கு மரணமடைகிறவர்களுக்கு அத்தருணத்தில் தாரகமந்திரத்தை, அதன் பொருள்விளங்கி ஞானமடையும்படி, உபதேசித்து முத்திதருகிறாரென்பதனால் அது விசேஷ மகிமையும் கீர்த்தியும்பெற்றது. இதன் பெருமை இன்னம் விஸ்தாரமுண்டு. அன்றியும் அங்கே விசாலாக்ஷி என்கிற அம்மனுடைய பீடமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அநேக இஷ்டசித்திகளும் உண்டென்பார்கள்.

காஞ்சி என்பது காஞ்சீபுரம். பிரமதேவனால் ஸ்ரீ மகாவிஷ்ணு பூசிக்கப்பட்ட இடம் என்பது அதன்பொருள். அங்கே பிரமதேவன் ஒரு யாகம்செய்து விஷ்ணுவைப் பிரத்தியக்ஷமாகக் கண்டார். அப்படிப் பிரத்தியக்ஷமானவர்தாம் வரதராஜ சுவாமி. அந்த நகரம் வேகவதி என்னும் ஒரு சிற்றாற்றங்கரையில் இந்தப் பிரமதேவனால் நிருமிக்கப்பட்டது. அதில் சிவபிரானும் 'அந்தர்வாகினி' அதாவது உள்ளோட்டமுள்ள கம்பா என்கிற ஒரு நதி

யில் ஒற்றை மாமரத்தடியில் விசேஷ சான்னித்தியஞ்செய்து ஞானோபதேசஞ்செய்தார். இவர்தாம் ஏகாம்பரநாதர். அந்நகர மத்தியில் மகா மகிமைபெற்ற சிவசக்திபீடங்களுள் ஒன்றாகிய காமகோடிபீடமென்று ஒரு ஆஸ்தானமுண்டு. அந்தக் காமகோடிபீடத்தில் காமாக்ஷியம்மை சிறப்புற்றிருக்கிறாள். இக்காரணங்களால் அந்நகரம் "முத்திதருநகரேழில் முக்கியமாங் கச்சி" என்று பெரியோரால் கொண்டாடப்பட்டது. காஞ்சியில் இன்னும் அநேக விஷ்ணுஸ்தலங்களும் சிவஸ்தலங்களும் உண்டு. அதனால் எங்கேபார்த்தாலும் அந்நகரம் கோபுரம், பிராகாரம் மண்டபம், மடம் முதலான நாகரிகக்கட்டடங்களும், கற்கட்டுக் குளங்களும், தோட்டங்களும் தோன்றி, அழகான காட்சியாய் விளங்கும். சிற்பத்தில் தேர்ச்சிபெற்ற அந்நியதேசத்தாரிலும் இந்நகரத்து மண்டபமுதலானவைகளின் சிறப்பத்திறத்தைக்கண்டு வியக்காதவரில்லை. அடுத்தபடத்தில் ஒருவாறு அந்தச் சிற்பவிசித்திரத்தைக் காணலாம்.

அவந்தி என்றால் காப்பாற்றுவது; பாவத்தினின்றும் ரக்ஷிப்பது என்பதாம். இதுதான் மாளவதேசத்துப் பிரதான நகராகிய உச்சயினி. மிகவும் ஜயங்கொண்டது என்பது இதன்பொருள். பாவங்களுக்குத் தோற்காமல் ஜயிப்பது என்கிற கருத்தால் அவந்தி என்கிற சொல்லின்கருத்தேயாகிறது. இதில் மகா காளேசுரவன் என்னும் திருநாமத்தினால் சிவபிரான் பிரசன்னராயிருக்கிறார். கயிலாசத்திலிருப்பவர்க்கு எப்படியோ அப்படியே தம்மைச் சரணமடைந்தவர்களுக்கு இங்கும் அவர் இதம் அருள்செய்துகொண்டிருக்கிறாரென்கிறார்கள். அன்றியும் இங்கே ஒரு மகா காளி இருந்து வேண்டியவரங்களை அருளுகின்றாள். இப்படி இந்நகரின் மகிமைக்குப் பல முகாந்தரங்களுண்டு. அங்கே விக்கிரமார்க்கன் முதலான மன்னர்கள் அரசாண்டுவந்தார்கள்.

துவாரகை என்பது மேல்கடற்கரையிலுள்ளது. இது கிருஷ்ணபகவானால் நிருமாணஞ்செய்யப்பட்டது. சத்துருக்கள் மோசமாய் உள்ளே புகாதிருக்கும்படி அநேக வாசல்கள் வைத்து அங்கங்கே தக்க மேன்மையான காவல்களும் வைக்கப்பட்டிருந்ததனால் துவாரகா அல்லது துவாரவதீ (வாயில்களுள்ளது) என்று நாமதேயம் உண்டாயிற்று. பகவானை அடையும்படியான பல வாசல்களுக்குக் காரணமானது என்று உட்கருத்துக்கொள்ளப்படும். கண்ணபிரான் ஜராசந்தனோடு பலதரம் யுத்தஞ்செய்தபோது, மதுரையைக் கொளுத்திவிடும்படி அந்தப் பகைவன் செய்த முயற்சியை அறிந்து, அவன் படைகளை தீயில் மாண்டுபோம்படி தந்திரமாய்க் கொளுத்திவிட்டு இந்நகரத்தை உண்டுபண்ணினார். இதில் அவர் இருந்து துஷ்டநிக்கிரகமும் சிஷ்டபரிபாலனமுஞ்செய்து மூவுலகத்துக்கும் இதஞ்செய்தார். அன்றியும் அவர் கீதை என்னும் சாஸ்தி

ரத்தினால் வேதாந்தங்களின் சாரமான சகல அர்த்தங்களையும் வெளியிட்டார். "பத்துடையடியவர்க் கெளியவன்பிறர்தமக்கரியவித்தகன்" எனப் பெரியோர் அருளிச்செய்தபடி தம்மடியாராகிய பாண்டவர்களுக்காகத் தூதுநடந்தும், தேரோட்டியும், பாண்டவதூதன், பார்த்தசாரதி என்கிற நாமங்களை மேன்மையாகக்கொண்டார். இப்படிப்பட்ட காரணங்கள்தாம் இந்த நகரிக்கு விசேஷ மகிமையைத் தந்தன. இதுவும் மதுரையும் அயோத்தியும் முன்னிருந்த நிலைகள் அழிந்துபோய் இப்போ வேறுவகையாயிருக்கின்றன. மாயையும் ஏறக்குறைய அப்படியே என்கிறார்கள்.

மனிதர்களின் தேகக்கட்டு.

சென்ற சஞ்சிகையோடு சுகாதாரத்தின் இரண்டாம் பாகம் முடிவுபெற்றது. அதிற்சொல்லியிருக்கிற விஷயங்களைப் படித்ததனால், மனிதசரீரத்தின் பற்பல அவயவங்களைப்பற்றிச் சில சங்கதி தெரிந்துகொண்டதும் அல்லாமல், நாம் ஜீவித்திருக்கவும், உழைக்கவும், விஷயங்களை ஆலோசிக்கவும் திறமையுண்டாகும்படி அவை எவ்வாறு பாடுபடுகின்றனவோ அதையுங் கண்டறிந்திருக்கிறோம். இப்போது மூன்றும் பாகம் ஆரம்பித்தோம்; ஆகையால் முதலில் மனிததேஹக் கட்டைப்பற்றி முதலில் ஒருவாறு ஆலோசித்துப்பார்ப்போம்.

மனிததேஹத்தில் தலையும், உடலும், கை, கால் முதலிய உறுப்புகளும் அடங்கியிருக்கின்றன. இவையெல்லாம் ஒருவகை எலும்புக்கூட்டினால் ஒன்றாய்ச்சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றன. தலைமேல் கபாலமிருக்கின்றது; அது தசை, தோல், மயிர் இவைகளால் மூடப்பட்டிருக்கும். அதன் கீழ்ப்புறந்தான் தேஹத்திற் சிறந்த பொருளான மூளைக்கு இருப்பிடம். சிரஸின் முன்புறத்தில் முகமிருக்கின்றது. அம்முகத்தில், கண், காது, மூக்கு, நாவென்னும் இந்திரியங்களும், பேசுதற்குரிய இந்திரியத்தில் ஒரு பங்கும் அடங்கியிருக்கின்றன.

கபாலத்தில் இருபத்திரண்டு எலும்புகளுண்டு. அவைகளுள் எட்டு மூளையையும், மற்றப்பதினான்கு முகத்தையும் சேர்ந்தவை. கீழ்வாயெலும்புதவிர மற்றவையெல்லாம் ஒன்றோடொன்று புணைக்கப்பட்டிருக்கும். மூளையெலும்புகளின் நுனி வாளின் பற்கள் போலக் கூர்மையாயிருப்பதால் அவை ஒன்றோடொன்று நன்றாய்ப் பொருந்திக் கோக்கப்பட்டிருக்கின்றன. இளமைப்பருவத்தில் மண்டையெலும்புகள் அதிகம்; முதுமைப்பருவத்தில் அவ்வளவு

இருக்கிறதில்லை. ஏனெனில் வயது ஏற ஏற சில பூட்டுகள் ஒன்ருய்ச் சேர்ந்துபோகின்றன. நமது பற்கள் முப்பத்திரண்டும் முழுதும் எலும்புகளல்ல; தந்தமென்னும் ஒருவகைப்பொருளும் ஒருவகை மேற்பூச்சும் சேர்ந்து பற்களாயிருக்கின்றன.

. உடலில் நெஞ்சங்குழி, குக்ஷி அல்லது உதரக்குழி என்று இரண்டு குழிகளுண்டு. அவையிரண்டும் ஒன்ருேடொன்று சேர்ந்திராமல் பிரிந்திருக்கும்படி அவ்விரண்டிற்கும் நடுவே கொஞ்சம் இடைவெளியிருக்கின்றது.

தேகத்தைப்பற்றிச் சொல்லிய படத்தை சென்ற பெப்ருவரிமாசத்திய சஞ்சிகையைப்பார்த்தால் அவை வெவ்வேருய்ப் பிரிந்திருப்பது நன்ருய்ப் புலப்படும். இருதயம், சுவாஸாசயம், பெரிய ரத்தப்பைகள் ஆகிய சுவாஸக்கருவிகள் மார்பிலிருக்கின்றன. உதரத்தில் இரைப்பை, ஈரல், குடல், ஜலப்பை முதலிய ஜீர்ணக் கருவிகள் இருக்கின்றன. நமது இரை உட்செல்வதற்கு வழியாயிருக்கின்ற பெரிய குழாய் மார்புக்கும் அடிவயிற்றுக்கும் குறுக்கே விதானத்தின்மூலமாய்ச் செல்லுகின்றது. இந்தக் குழாய் வாயண்டை ஆரம்பிக்கும். அதனுள் தொண்டை, கண்டநாளம் இரைப்பை, சிறிதும் பெரிதுமாகிய பல குடல்கள் ஆகிய இவை அடங்கியிருக்கின்றன. ஒரு மனிதன் உடலில் இந்தக் குழாய் சுமார் முப்பத்துமூன்றடி நீளம் உள்ளதாயிருக்கும்.

உடலின் முக்கியமான எலும்புகளாவன:

முதுகெலும்பு (அதன் பிரிவு 33).	தோள்பட்டையெலும்புகள் 2.
விலாவெலும்பு (பக்கத்துக்கு 12).	கழுத்தெலும்புகள் 2.
மார்பெலும்பு.	அடிவயிற்றெலும்பு.

உடலில் கைகளும் கால்களும் ஆகிய இரண்டிஜதை அவயவங்களுண்டு. கையானது புஜம், முழங்கை, மணிக்கட்டு, நுனிக்கை, விரல்கள் என ஐந்து பிரிவு உள்ளது. அப்படியே காலும் துடை, முழங்கால், கணுக்கால், பாதம், விரல்கள் என ஐந்துபிரிவு உள்ளது.

ஒவ்வொரு கைகளிலும், கால்களிலும் முப்பது நரம்புகளுண்டு.

அவையாவன:

1. மேற்கை அல்லது புஜம்.	1. துடை.
2. கீழ்க்கை அல்லது முழங்கை.	2. கால்.
8. மணிக்கட்டு.	1. முழங்கால்.
5. நுனிக்கை.	7. கணுக்கால்.
14. விரல்கள்.	5. பாதம்.
	14. விரல்கள்.

மனிததேஹத்தில் எலும்புகள் இருநூறுக்கு மேற்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் ஒன்ருேடொன்று பூட்டுகளால் சேர்த்துக் கோக்கப்பட்டிருக்கின்றன. அப்படி எலும்புகளாலாகிய கூடானது

நமது சரீரத்துள் இருக்கிற அதிநுட்பமான உறுப்புகளுக்கு யாதொரு தீங்கும் நேராதபடி அவைகளைப் பத்திரமாய்க் காத்து ரக்ஷிக்கின்றது. இளமைப்பருவத்தில் வெவ்வேறாகப் பிரிந்திருக்கிற அநேகம் எலும்புகள் முதுமைப்பருவத்தில் ஒன்றாய்ச் சேர்ந்துபோவதனால் நமக்கு வயதாக வயதாக நரம்புகளின் கணக்கு குறைந்துபோகின்றது.

சரீரத்தின் உட்புறத்தைக் கவர்ந்துகொண்டிருக்கிற எலும்புகளெல்லாம் நமக்கு மிக்க உபயோகமானவை. இந்த எலும்புகள் இல்லாவிட்டால் ஒரு சேதமுமுண்டாகாமல் நமது உறுப்புகளை நமது இஷ்டப்படி அசைப்பது கூடாது. முதுகெலும்பும் அதைச் சேர்ந்த எலும்புகளும் இல்லாமற்போனால் முதுகை ஒருபோதும் வளைக்கக்கூடாது. அப்படியின்றி வளைத்தால் மூளையிலிருந்துவருகிற பிரதான நரம்பு சேதப்பட்டு பலங்குறைந்துபோம். ஒவ்வொரு வேளைகளில் மரணமும் சம்பவிக்கும். அப்படியே நமது கையின் இரண்டு எலும்புகளும் கணுக்கை எலும்புகளும் விரல் எலும்புகளும் இல்லாவிட்டால் நமது இஷ்டப்படி விரல்களையும் கைகளையும் நீட்டவும் மடக்கவும், அவைகளால் ஒரு பொருளை இழுக்கவும் எடுக்கவும் மாளாது.

தக்காணத்துப் பூர்வகதைகள்.

ஒரு விநோதக் கதை.

ஒருகால் ஒரு தேசத்தில் அரசனும் அரசியுமிருந்தனர். அவர்கள் வெகுநாள் ஸந்தானமில்லாமல் சோகமடைந்திருந்தார்கள். அவர்கள் அரண்மனையிலிருந்த ஒரு நாயும் அப்படியே அநேகநாள் குட்டிபோடவேயில்லை. இப்படியிருக்கையில் சிலநாளைக்குப்பின் அவ்வரசிக்குப் பிள்ளைகள் பிறந்தன. அக்காலத்தில் அவர்கள் அரண்மனை நாயும் குட்டிபோட்டது; விதிவசத்தால் ராணியின் இரண்டு பிள்ளைகள் இரண்டு நாய்க்குட்டிகளாகவும், நாய்க்குட்டிகளிரண்டும் சுந்தரமான இரண்டு ராஜகன்னிகைகளாகவுமிருந்தார்கள். இதென்ன துரதிர்ஷ்டம் பாருங்கள். இதனால் ராணிக்கு மிகவும் மனத்துயரமுண்டாயிற்று. அதனால் அரசி ஒவ்வொருவேளைகளில் அந்தநாய் இரைதேடப்போயிருக்கிறதருணம்பார்த்துதன்குழந்தைகளான நாய்க்குட்டிகளை அந்த நாய்க்குழியில் கொண்டுவிடுவதும், அங்கிருக்கிற கன்னிகைகளைத் தன் அரண்மனைக்கு எடுத்துக்கொண்டுவருவதுமாயிருந்தாள். இச்செய்திதெரிந்து, அந்தநாய் மிக்க ஆயாஸமடைந்து: "இவர்கள் நம்குழந்தைகளை ஒருபோதும் விடார்கள். இங்கே விட்டுவைத்தால் அவைகளுக்கு உயிர்கூடத் தப்புமோ

தப்பாதோ? இவ்விடத்தைவிட்டுக் காட்டுக்குப்போவதே நல மென்றெண்ணி, ஒருநாள் ராத்திரி அவ்விரண்டு பெண்களையும் வாயிலே கவ்விக்கொண்டு ஒரு காட்டிற்சென்று அங்கே ஒரு ஆற்றங் கரையில் ஒரு கற்குகைக்குள் இடமேற்படுத்தி அதில் அப்பெண்களை விட்டுவைத்தது. தினந்தோறும் பட்டணங்களுக்கோடி அங் கங்கே தனக்கு அகப்படுகிற உணவுகளைக் கொண்டுவந்து அப் பெண்களுக்குக் கொடுக்கும். ஏதாவது ஆடையாபரணங்கள் அகப் பட்டாலும் அவைகளையும்கொண்டுவந்து கொடுக்கும். இப்படியே கொஞ்சகாலம்வரையில் நடந்துவந்தது.

இப்படியிருக்கையில், ஒருநாள் அந்த நாய் ஊணுக்காக வெளியே போயிருக்கையில், அந்தக் காட்டிற்கு வேட்டையாட வந்த இரண்டு ராஜகுமாரர்கள் அன்றையதினம் நெடுநேரம் வேட்டையாடியும் ஒன்றும் அகப்படாமல் வெயிலால் களைத்து, தாகத்தால் வருந்தி, ஒரு மேட்டுத்தாக்கிலிருந்த மரத்தின்கீழ்வந்து உட்கார்ந்து தண்ணீர் தேடிக்கொண்டுவரும்படி தம் ஏவலாளர்களை நாற்புறமனுப்ப அவர்கள் எங்குந்தேடித் தண்ணீர் அகப்படாமல் வந்துசேர்ந்தார்கள். கடைசியில் ஒரு வேட்டைநாய் உடம்பெல்லாம் சேறுபூசிக்கொண்டு அம்மரத்தண்டை வந்து நின்றது. ராஜகுமாரன் அது வந்திருப்பதைப்பார்த்து: "இதோ இந்த நாயின் உடம்பெல்லாம் சேறாயிருக்கின்றது. இது எங்கேயோ தண்ணீரைக் கண்டுபிடித்திருக்கவேண்டும். அதன் பின்னேயே போய்ப் பாருங்கள்" என்று கட்டளையிட்டான். அப்படியே அவர்கள் அதைப் பின்தொடர்ந்து போனார்கள். அது அவர்களை அந்த நாய்ப்பெண்கள் இரண்டும் வாசஞ்பண்ணுகிற குகையண்டை கொண்டுவிட்டது. இவர்களைப் பார்த்தவுடன் அவ்விரண்டு பெண்களும் பயந்து குகைக்குள் ஓடிப்போனார்கள். அந்த வேலைக்காரர்கள் அங்கே ஓடுகிற காநுறையும் இந்த விநோதத்தையும் பார்த்துக் கொண்டு ராஜகுமாரர்களண்டைபோய், "இதோ அருகாமையில் தெளிந்து அதிமதுரமான தண்ணீருள்ள நதியொன்றைக்கண்டோம். அங்கே இன்னொரு விசேஷமுண்டு. அந்த நதிக்கரையில் ஒரு குகையில் சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டு இரண்டு கன்னிகைகள் இருக்கின்றனர். அப்படிப்பட்ட அழகை நாங்கள் எங்குங் கண்டதில்லை. எங்களைப்பார்த்தவுடன் அவர்கள் பயந்து உள்ளேபோய்ப் புகுந்துகொண்டார்கள்" என்று சொல்ல, அதைக் கேட்டவுடன் ராஜபுத்திரர்கள் அதிசயப்பட்டு, அவ்விடத்திற்குத் தாங்களுஞ்சென்று அப்பெண்களைப்பார்த்து மோஹித்து, அவ்வழகிகளைத் தங்கள் பட்டணத்திற்குவந்து தங்களைக் கலியாணஞ்செய்துகொள்ளும்படி வேண்டிக்கொண்டார்கள். அப்பெண்கள் இவர்களைக்கண்டு நடுநடுங்கிப் பேசாமலிருக்க, ராஜகுமாரர்களிருவரும் வெகுராஞ்சகமாய் மனங்களிக்கும்படிபேசி வேண்டிக்

கொண்டதனால் அப்பெண்கள் அவர்கள் வேண்டுகோளுக்கிசைந்து அவர்களோடு பட்டணஞ்சென்றார்கள். அவர்களுள் மூத்தகுமாரன் மூத்தமகளையும், இளையவன் இளையவளையும் கலியாணஞ் செய்துகொண்டு சுகமாயிருந்தார்கள்.

இது இப்படியிருக்க, இரைதேடப்போயிருந்த நாய் திரும்பிவந்து பார்த்துத் தன் குழந்தைகளைக் காணாமல் மிகவும் மனவருத்தமடைந்து அவர்களை நாலாமூலையிலும் தேடத்தலைப்பட்டது. பனிரண்டுவருஷகாலம் ஒரு நிமிஷங்கூட நின்றவிடத்தினில்லாமல். சீமைமுழுதும் தேடிக்கொண்டுவந்தது; அந்தப் பெண்கள் எங்கும் அகப்படவில்லை. கடைசியில் ஒருநாள் அந்த ராஜகுமாரர்களிருக்கின்ற பட்டணத்திற்கு வந்தது; அங்கே உப்பரிகைமேல் சாளரத்தின்வழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்த ராஜமஹிஷி தன் தாயான நாய் அந்த வீதிவழியாய்ப் போகக்கண்டு இரக்கமுற்று, சரேலென்று உப்பரிகையைவிட்டிறங்கித் தெருவிலோடிவந்து அந்தநாயை எடுத்து அணைத்துக்கொண்டு, தன் மாளிகைக்குக் கொண்டுபோய் அதற்குவேண்டிய உபசாரங்கள்செய்து ஒரு மெத்தைமேல் படுக்கவிட்டாள். அந்தநாய் தன் மூத்தமகள்செய்த ஆதரணைகளைக் கண்டு வியந்து, குழந்தாய்! உனக்கு என்னிடத்திலிருக்கிற விசுவாசத்தை நான் என்னவென்று சொல்லுவேன். உன்னைப்பார்த்து எனக்கு வெகு சந்தோஷமாயிற்று. ஆயினும் இப்போது எனக்கு இங்கே நிற்பதற்கு இல்லை. முன்னே உன் தங்கையைப்போய்ப் பார்த்துவிட்டு வருகிறேனென்று சொல்ல, அதற்கு ராணி: "அம்மா! வேண்டாம், இன்றையதினம் இங்கே இளைப்பாறிக்கொண்டிரு; நாளையதினம் அவளண்டை அனுப்புகிறேன். அதற்குள் அவளும் உன்னைப் பார்க்கவருவாள்" என்று ஆதரவோடு சொல்ல, அந்தநாய் அதைக்கேளாமல் தன் இளையமகளைப்பார்க்க ஓடிற்று. அது தன் வீட்டுவாயிலில் நுழைவதை உப்பரிகைமேலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அப்பெண்: "இது நமது தாய்போலக் காண்கிறதே. இந்த அவலக்ஷணமான அற்பஜந்து நமது தாயென்று நம்முடைய புருஷனுக்குத் தெரிந்தால் என்னநினைப்பார்" என்று எண்ணி, அதை உள்ளே வரவொட்டாமல் அதின் தலைமேல் கல்லெடுத்துப்போட்டுத் துரத்திவிடும்படி தன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டாள். அவர்களும் அப்படியே அக்கட்டளையை நிறைவேற்றினார்கள். அவர்கள்போட்டபாறை தன் மண்டையில்வீழ்ந்து நன்றாய்க் காயம்படவே, அந்தநாய் திரும்பிக்கொண்டு வெகுவருத்தத்தோடு தன் பெரிய பெண்வீட்டிற்கு வந்தது. அவள் அது தெருவிலே வருந்தி ஓடிவருவதை மேலேயிருந்துபார்த்து உடனே இறங்கிவந்து, அதைத் தன் அரண்மனைக்கு எடுத்துக்கொண்டு போய், "என்னுயிர்த்தாயே! நீ ஏன் என் பேச்சைக் கேளாமல் இந்த வீட்டைவிட்டு வெளியேபோனாய்!" என்று சொல்லி,

மிகவும் ஈசனமடைந்து அது பிழைக்கும்படி தன்னால் கூடி யவரையில் சிகிச்சைசெய்தாள். அவையொன்றும் பயன்ப டாமற் கடைசியாய் அந்த எளியநாய் இறந்துபோயிற்று. தன் தாயான நாய் இறந்துபோகவே, ராணி ஒன்றுந் தோன்றாமல், ஒரு அற்பநாய் தன் அரண்மனையில் செத்துக்கிடக்கிறதென்று ராஜா வுக்குத் தெரிந்தால் என்னநினைப்பாரோவென்று, அவர் ஒருபோ தும் எட்டிப்பாராத ஒரு அறையில் கொண்டுவந்து வைத்து ஒரு கூடையைக் கவிழ்த்து மூடிவைத்தாள். விசேஷ சம்பிரமமாய்க் கொண்டுபோய் அதைப் புதைக்கவேண்டுமென்பது அவள் கருத்து.

அன்றையதினம் வழக்கப்படி அரசன் தன் நாயகியைப் பார்க்க அந்தப்புரம் வருகையில், தற்செயலாய் நாய்ப்பிணம்வைத்து மூடி யிருந்த இருட்டறைக்குள் சென்றான். அங்கே ஒரு கூடை கவிழ்த் திருக்கவே அதைத் திறந்து அங்கிருப்பது இன்னதென்று தெரி யாமையால் விளக்கு கொண்டுவரவேண்டுமென்று உத்தரவுசெய் தான். இப்போது அங்கிருந்தது என்ன தெரியுமா? விளக்கு கொ ண்டுவந்துபார்க்கையில், வச்சிரம், வைடூரியம், மரகதம்முதலிய நவ ரத்தினங்களாலிழைத்த ஒரு பெரிய சுவர்ணநாயிருந்தது. அரசன் அதைப்பார்த்து அதிசயித்துத் தன் மனையாளை அழைத்து: "உன க்கு இந்த அற்புதநாய் எங்கே கிடைத்தது" என்றான். அவள் ஓடி வந்து அங்கே சுவர்ணமயமாய் விலையுயர்ந்த நாய்ப்பிரதிமையொ ன்று இருக்கக்கண்டு திகைத்துநின்றாள். அப்போது அவள் அதற்கு என்ன உத்தரம் சொல்லலாம்? தன் நாயகனோடு உள்ளதை உள்ள படி சொல்லத்துணியவில்லை. சற்றுநேரம் நிதானித்துப்பார்த்து: ஓ! ஓ! இதுவா! இதை என் தாய்தந்தையர்கள் எனக்குப் பரிசாய் அனுப்பினார்களென்று ஒரு பொய்க்கதை கட்டிச்சொன்னாள்.

அவள் தன் கணவனோடு உண்மையுரையாமையால் உண்டான வருத்தத்தை இதோ பாருங்கள். அதைக்கேட்டு அரசன் ஆச்சரிய மடைந்து: "ஆ அப்படியா! என் ராஜ்யமெல்லாங்கூட இவ்வொன் றுக்கு ஈடாகாதே! இப்படிப்பட்ட விலையில்லாப் பொருள்களை உன க்குப் பரிசாய் அனுப்புகிறவர்கள் எவ்வளவு செல்வவான்களாயி ருக்கவேண்டும்! அவர்களைப்பற்றி நீ என்னோடு இதுவரையில் பிர ஸ்தாபமேசெய்யாமலிருப்பதேன்? அவர்கள் அரசாட்சி எங்கே?" "என்றுகேட்டான். இப்போது அவள் செய்யவேண்டுவதென்ன? வேறொரு பொய்க்கதை கட்டியன்றோ முன்பொய்யை மறைக் கவேண்டும். ஒரு காட்டில் வசிக்கிறார்களென்றாள். அதுகேட்டு அரசன்: "அப்படியா! ஆனால் நான் அவர்களைப் பார்க்கவேண் டும். அவர்களிருக்கும் இடத்திற்கு என்னை அழைத்துக்கொண் டுபோ" என்று சொல்ல, அவன் மனையாள் என்ன பொய்க் கதை சொல்லுகிறேன் பார்த்தையா! நான் சொல்வது பொய் யென்று அவர்க்குத் தெரிந்துபோமானால் அவர் என்ன நினைப்

பார்! உடனே எனது தலையை வாங்கிவிடுவாரேயொழிய வேறில்லையே" என்று ஆலோசித்து: "அப்படியே ஆகட்டும்; முதலில் பல்லாக்குக் கொடுத்து என்னை அனுப்புவீர்களானால் தாங்கள் வருவதாய் அவர்களுக்கு முன்னதாய்ச் சொல்லிவருகிறேன்" என்றாள். தற்கொலைசெய்துகொண்டு இவ்வருத்தத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென்று அவள் உள்ளூற நினைத்திருந்தாள்.

அவள் சொன்னபடியே அரசன் அவளைப் பிறந்த அகத்திற்கு அனுப்பினான். அவள் நகரத்தைவிட்டுக் காடுகளின்வழியாய் வெகுநாள் யாத்திரைசெய்தபிறகு, ஒருநாள் ஒரு காட்டில் ஒரு புற்றின்மேல் ஒரு பாம்பு வாய்திறந்துகொண்டு படுத்திருக்கக் கண்டு, நாம் அதனண்டை சென்று அதின் வாயில் விரலைவைத்தால் கடித்துவிடும், இறந்துபோகலாமென்று ஆலோசித்து, "நான் கொஞ்சநேரத்தில் வருகிறேன், இங்கேயே காத்திருங்கள்" என்று தன் வேலையாள்களுக்குக் கட்டளையிட்டு, சிவிகையை விட்டிறங்கிப் போய் அந்த நாகத்தின் வாயிலே கையையிட்டாள். அப்போது அதின் தொண்டையில் ஒரு முள்மாட்டிக்கொண்டு அந்த அரவம் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருந்தது; இவள்போய் விரலை வாயிலிடவே, அந்தமுள் வெளியே வந்துவிட்டது. அதனால் அந்த நாகம் நிரம்பவும் நிம்மதியடைந்து, அவளைப்பார்த்து: "பெண்ணே, என்னருமைக் குழந்தாய்! நீ இப்போது எனக்குப் பேருதவி செய்தாய், உனக்குப் பிரதியுபகாரம் நான் என்னசெய்யமாட்டுவேன்" என்றுசொல்ல, அவள் ஆதிதொடங்கித் தன் கதைகளைச் சொல்லித் தான் இறந்துபோம்படி தன்னைக் கடிக்கவேண்டினாள். அதுகேட்டு அந்தச் சேஷன்: "நீ இவ்வாறு அரசனோடு பொய்க்கதை சொன்னது மிகவும் பிசகானகாரியம். ஆயினும் நீ இப்போது எனக்கு மகோபகாரஞ்செய்ததனால் எனக்கு உயிர்த்தோழியாய்விட்டாய். ஆதலால் இந்த வருத்தத்தினின்றும் நான் உன்னைக் கைதூக்கிவிடுகிறேன். உன் நாயகனை இங்கே அழைத்துவா. உன்னிடத்தில் மிகவும் பக்ஷமுள்ளவர்களாய்த் தாய்தந்தையர்களை நான் இங்கே ஏற்படுத்திவைக்கிறேன்" என்று சொல்ல, அந்த ராணி பேரானந்தமடைந்து, பட்டணம்போய்த் தன் மாதாபிதாக்களைப் பார்க்கவரும்படி அரசனை அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுவந்தாள்.

முன் அந்த நாகமிருந்தவிடம் இப்போ அவர்கள் போய்ப்பார்க்கையில் எவ்வாறிருந்தது அறிவீர்களா? அந்தப் பெருங்காடு இருபத்தினான்கு சதுரமைல் அளவுள்ள ஒரு நகரமாயிருந்தது. அந்நகரமெல்லாம் சிங்காரத்தோட்டங்களும், தூரவுகளும், ஏரிகளும், குளங்களுமாய் அழகுமிகுந்திருந்தது. அந்நகரத்திலேற்றிய விளக்குகள் சுற்றி நூறுமயிலுக்குப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அப்பட்டணம் முழுதும் பொன்னால் சுவரெடுத்து நவரத்தினங்களால் சித்திரிக்கப்பட்டிருந்தது. அங்கே வாயில்கள்தோறும்

அநேகம் சேவகர்கள் சிறந்த உடுப்புகளுடுத்துக் காவல்காத்துக் கொண்டிருந்தனர். அப்பட்டணத்தினடுவே ஒரு உயர்ந்த மாளிகையிலே நவரத்தின சிங்காசனத்தில் அரசனும் அரசியும் வீற்றிருந்தார்கள். அவர்கள் இந்த ராஜனைக் கண்டவுடனே தங்கள் மருமகனைக் கண்டதுபோல அவனை மேலானமரியாதைகளோடு வரவழைத்து அவனுக்குச் சகலவித உபசாரங்களும் செய்து, ஐந்தாறுமாதகாலம் பாட்டு கூத்து விருந்து முதலியவைகளோடு வெகு விலாசமாய்த் தங்களண்டையே வைத்திருந்து, கடைசியில் பலவித பரிசுகளோடு அவனை அவன் பட்டணத்திற்கு அனுப்பினார்கள். அவ்விடத்தைவிட்டுப் புறப்படுவதற்குச் சற்றுமுன்னே அந்த ராணி தன்னுயிர்த்தோழனான நாகத்தண்டைபோய், "எனது பயத்தைத்தீர்க்க நீ செய்த ஜாலவித்தையைப்பார்த்து எனக்கு வெகு சந்தோஷமாயிற்று. ஆனாலொன்று, இப்போது என் கணவன் இவ்விடத்தில் நடந்த உபசாரங்களால் மிகவும் மனக்களிப்படைந்திருக்கிறார். அவசியம் இன்னொருதடவை இவ்விடத்திற்கு வர விருப்பங்கொள்வார்; அப்போது வந்துபார்க்கையில் இங்கே ஒன்றுமில்லாமற்போனால் என்மேல் மிகக் கோபங்கொள்வாரே" என்று கேட்க, அதற்கு அவளிடத்தில் மிகவும் அன்புள்ள அந்தப் பணியானது அம்மா! நீ அஞ்ச வேண்டாம். இவ்விடம் விட்டு இருபத்தினான்கு மைல்தூரம் போனபின்பு திரும்பிப்பார்த்தையானால் உனக்குத் தெரியவருமென்று விடைகொடுத்தது. அப்படியே அவர்கள் புறப்பட்டுப்போனார்கள். இருபத்தினான்குமைல் போனபிறகு திரும்பிப்பார்க்கையில் அந்நகரமிருந்தவிடத்தில் ஆகாயமளாவித் தீபற்றியெரியக்கண்டார்கள். அரசன் அதைப்பார்த்து வியாகுலமடைந்து இரண்டொருவர் தப்பிப்பிழைத்தவர்களுக்காவது தான் கூடியவரையில் உதவிசெய்யலாமென்று திரும்பி அவ்விடஞ்சென்றான். அவன் போய்ப்பார்க்கையில் எல்லாம் எரிந்துபோய்க்கிடந்தன. ஒரு பருக்காங்கற்கூட அவன் கண்ணுக்குத் தென்படவில்லை. முன் அவ்வளவு சிறப்புற்றிருந்த தன் மாமி மாமனார்களுக்கு இப்படிப்பட்ட விதி நேர்ந்ததற்காகத் தீராத்துயரமடைந்து திரும்பிப் பட்டணம் வந்துசேர்ந்தான்.

இவ்வரசன் இவ்வளவு விசேஷமானபரிசுபெற்றுவந்ததை அவன் தம்பிகண்டு ஆச்சரியமடைந்து, இப்பரிசுகள் உமக்கு எங்கே கிடைத்தனவென்று வினவ, அவன் இவையெல்லாம் என் மாமி வீட்டு வரிசையென்றான். அவன் இதைக் கேட்டவுடனே மிகவும் அசந்துஷ்டனாய்த் தன் மனைவியண்டைபோய், "நீ ஏன் இதுவரையில் உன் தாய்தந்தையர்களைப்பற்றி என்னோடு ஒன்றுஞ்சொன்னதில்லை. உன் உடன்பிறந்தாளைப்போல நீயும் ஏன் என்னை அவர்களிடம் அழைத்துக்கொண்டுபோகக்கூடாது? என் அண்ணனைப்போல் நானும் விசேஷமாய்ப் பரிசுபெற்றுவரமாட்டேனா" என்று

கேட்டான். அவன் மனையாள் அதைக்கேட்டுத் தன் சகோதரியிடம் வந்து, "இவ்விலையில்லாப் பொருள்களெல்லாம் நீ எவ்வகையாய்ச் சேகரித்தாய்" என்றாள். அதற்கு அந்த ராணி: நீ என்முன் நில்லாதே, அப்புறம்போ. நான் உன்னுடன் பேசமாட்டேன். நமது தாயைக்கொன்ற கொடியவளல்லவா நீ என்று கடுஞ்சொல்லீடிய் அதட்டி, பிறகு நடந்ததையெல்லாம் சவிஸ்தாரமாய்ச் சொன்னாள். அதுகேட்டு அவள் தங்கை, நானும் அப்பாம்பைப்போய்க் கண்டு அதினின்றும் பரிசுபெறக்கூடுமாவென்றதற்கு, அவள்: என்னைக் கேட்பானேன்? உனக்கு இஷ்டமிருந்தால் போகலாம் என்றாள்.

அச்சிறுமி அங்கிருந்துவந்து, தான் முன்னதாய்ப்போய் இச்செய்தியைத் தன் தாய்தந்தையர்களுக்குத் தெரிவித்துவருவதாய்த் தன் கணவனோடுசொல்லிச் சிவிகையிலேறிக்கொண்டு தன் தமக்கை சொன்னவிடம்போய்ச் சேர்ந்து அங்கே அந்தப் புற்றிலே பாம்பிருக்கக்கண்டு அதின் வாயில் விரலையிட்டாள். விஷந்தீண்டி உடனே இறந்துபோனாள்.

செஞ்சிக்கோட்டையையும் தேசிங்குராஜாவையும் பற்றிய கதை.

முற்காலத்தில் செஞ்சியில் ஆண்டுகொண்டிருந்த அதிபதிகளுக்குள் தேசிங்குராஜா என்பவன் மிகவும் பராக்கிரமசாலியென்று பேர்பெற்று மகாப் பிரசித்தமாய் விளங்கியிருந்தான். சாதாரணமாய் அவனுடைய கதையைச் சொல்லும்போது தான் செஞ்சிக்கோட்டையின் பிரஸ்தாபமும் கூடவருகிறது. இப்படி அந்தக் கோட்டையையும் அரசனையும் ஒட்டிச் சொல்லப்பட்டுவரும் கதையினால், அது அவன் கட்டிவைத்ததென்று நினைக்கக்கூடாது. அது அவன்காலத்துக்கு வெகு நாளைக்குமுற்பட்டது. தேசிங்குராஜாவின் காலம் இருநூறு முந்நூறு வருஷத்துக்குள்ளேதான்; அந்தக் கோட்டையோ அதற்கு எவ்வளவோகாலத்துக்குமுன் கட்டப்பட்டதென்று நினைக்க இடமுண்டு. ஆனால் அது எந்தக்காலத்தில் யார்கட்டிவைத்ததோ செவ்வையாகத் தெரியவில்லை; தூபக்கால் கிருஷ்ணப்பநாயகன் என்கிற ஒரு விஷ்ணுமதஸ்தன் அதைக் கட்டிவைத்ததாகச் சொல்லுகிறார்கள். அவன் காஞ்சீபுரத்துக்குச் சமீபத்திலிருந்தானும்; வரதராஜசுவாமிக்கென்று ஒரு பூந்தோட்டம் வைத்து அதை மிகவும் ஆவலோடு பாதுகாத்து அதில் உற்பத்தியாகும் புஷ்பங்களை ஒன்றுகூட வீணாகாமல் அந்தச் சுவாமிக்கே சிரத்தையாகக் கொடுத்துவந்தான். சுவாமிக்கும் அவனிடத்தில் கிருபை உண்டாயிற்று; ஒரு நாள் சுவாமி அவனுடைய பக்தியைப் பரிசோதிப்பதற்காக தசாவதாரங்களில் ஒன்றாகிய வராகரூபமெடுத்துக்கொண்டு அந்தத் தோட்டத்தில் புகுந்து நாசம் செய்ய ஆரம்பித்தார். தோட்டக்காரர்கள் பன்றியைப்பார்த்து அதைப் பிடிக்கப் பலமுயற்சிசெய்தும், அதை ஜயிக்கச் சக்தியற்றவர்களாய் கிருஷ்ணப்பநாயக

னிடத்திற்சென்று ஒரு பொல்லாதபன்றி நம்முடைய நந்தனவனத்தை அழிக்கவந்திருக்கிறதென்று முறையிட, அவன் உடனே ஓடிவந்து பன்றியிருக்கும் இலக்கைப்பார்த்துச் சுட்டான். குண்டு அதன்மேற்படாமல் பக்கமாய்ப் பாய்ந்துபோய்விட்டது; சுவாமிக்காகவைத்துப் பிராணனுக்குப் பிராணனாய் நாம் பரிபாலித்துவருகிற இந்தத் தோட்டத்தை நாசஞ்செய்யவந்த பன்றியை நாம் தப்பவிடுகிறதாவென்று அகங்காரங்கொண்டு அதை எப்படியாவது பிடித்துப்போடவேண்டுமென்கிற தீர்மானத்துடனே அதைத் துரத்தத்தொடங்கினான். அதுவும் அவன் கையில் பிடிபடாமல் ஓடிற்று, அவனும் பின்வாங்கவில்லை. இப்படி சிலநாளானபின், தம்மிடத்தில் அவனுக்குப் பூரணமான பக்தியிருக்கின்றதென்று திருப்தியடைந்து இனி தம்முடைய நிஜஸ்வரூபத்தை அவனுக்கு வெளியிடலாமென்று சுவாமிக்குத் தோன்றிற்று. செஞ்சிக்கு வடமேற்கே இரண்டு மூன்று மைல்தூரத்தில் சிங்கபுரம் என்கிற ஊருக்கருகே வரும்போது ஒரு பாறையைத் துளைத்து அதில் தம்முடைய உண்மையான உருவத்தோடு கிருஷ்ணப்பநாயகனுக்கு முன் நின்றார்; அதைப்பார்க்கவே அவனுக்கு உடம்புமுழுவதும் கூசிற்று. சுவாமியைப் பன்றியென்று நினைத்துக் கொல்லப்பார்த்தோமேயென்று விசனப்பட்டு சாஷ்டாங்கமாய்க் கீழேவிழுந்து மன்னித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, சுவாமியும் அவனிடத்தில் கிருபைகூர்ந்து அவனை எழுந்திருக்கச்சொல்லி தாம் வந்து நின்ற அந்தவிடத்தில் ஒரு கோயில் கட்டும்படி நியமித்தார். அப்போது கிருஷ்ணப்பநாயகன் நானோ மிகவும் ஏழை; உறவினரையும் சிநேகிதரையும்விட்டு வெகு தொலை வந்திருக்கிறேன்; கோயில் கட்டுவதற்கு நான் என்னசெய்வேன், அதற்கு உபாயம் காட்டவேண்டுமென்று கேட்க, சுவாமி செஞ்சிமலையினருகே ஒரு பரதேசி இருக்கிறான்; அவனிடத்தில் போய்க் காத்திருவென்று அருளினார். சுவாமியின் கட்டளைப்படியே அவன் சந்நியாசியினிடத்திற்போய்ச் சேர்ந்தான். இரும்புமுதலான அற்பஉலோகங்களைப் பொன்னாக மாற்றுவதற்கான கல் ஒன்றுண்டு; அது இந்தப் பரதேசியினிடத்தில் இருந்ததாகக் காண்கின்றது; ஆகிலும் அதை அப்படிச் சொல்லாமல், ஒருவிதப் பச்சையிலை அவனிடத்தில் இருந்ததென்கிறார்கள். அந்த இலையைத் தண்ணீரில் கொதிக்கவைத்து அதில் ஒரு புண்ணிய புருஷனைப்போட்டால் சரீரமுழுவதும் சுவர்ணமாகிவிடுமாம். அவன் கிருஷ்ணப்பநாயகனை இந்தவிதமாய்ப் பலிகொடுக்க நினைத்து முன்னால் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் செய்துகொண்டிருக்கும்போது, அவனுடைய எண்ணம் கிருஷ்ணப்பநாயகனுக்கு என்னமாகவோ தெரிந்துவிட்டது. மனிதன் ஒன்றுநினைக்க தெய்வம்ஒன்று நினைக்கிறது என்கிறபடி, சந்நியாசி கிருஷ்ணப்பநாயகனுக்குச்செய்ய நினைத்த கெடுதி அவனுக்கே சம்பவித்தது; எப்படியெனில் கொப்பரையில் தண்ணீர் நன்றாய்க் காய்கிற சமயம்பார்த்து கிருஷ்ணப்பநாயகன் சந்நியாசியைத் தூக்கி அதிலே போட்டுவிட்டான். சற்றுநேரத்துக்கெல்லாம் பிணத்தின் சரீரம் கொஞ்சம் கொஞ்சமாய் அவயவம் அவயவமாய்ச் சுவர்ணமாகமாறித் தங்கச்சரீரமாயிற்று. கிருஷ்ணப்பநாயகன் சுவாமியின் நியமனத்தை நிறைவேற்ற இனி என்னதடை? ஒருநாள் அதிலிருந்து கொஞ்சம் தங்கம் வெட்டிக்கொண்டான்; மறுநாளைக்குள் அது வெட்டினது தெரியாமல் முன்போலவே பூர்ணமாகிவிட்டது. இப்படியே எத்தனைதரம் வெட்டினாலும் அது கொஞ்சமேனும் குறையவில்லை. சிங்கபுரம் கோயிலும் செஞ்சிக்கோட்டையும் கட்டிமு

டிந்தது; பிறகு கிருஷ்ணப்பநாயகன் அந்தச் சுவர்ணசரீரத்தைக் கோட்டைக்கு முன்னே கல்யாண மண்டபத்துக்குச் சமீபத்தில் செட்டிகுளத்தில் ஒரு மூலையில் எறிந்துவிட்டானும். அது இருக்குமிடம் ஒருவருக்கும் தெரியவில்லையேயொழிய, அது இல்லாமற்போகவில்லை. இப்போதும் அங்கே இருக்கத்தானிருக்கிறதென்கிறார்கள். வரதராஜசுவாமி பன்றிரூபமாய்க் காஞ்சீபுரத்து நந்தனவனத்திலிருந்து ஓடிவரும்பொது ஒரு எலுமிச்சம்செடியையும் நஞ்சாவட்டைச்செடியையும் வாயில் கவ்விக்கொண்டு வந்தாராம்; அவ்விரண்டும் கோயிலுக்குச் சமீபத்தில் வைக்கப்பட்டு இப்போதுமிருக்கின்றன.

செஞ்சியை ஆண்டுவந்த அதிபதிகள் ஆர்க்காட்டு நபாபின் விசாரணைக்குள் அடங்கினவர்களாய் டில்லிச் சக்கரவர்த்திக்குக் கப்பம்கட்டிக்கொண்டிருந்தார்கள். கிருஷ்ணப்பநாயகனுடைய சந்ததியாரோ என்னவோ தெரியவில்லை, சிலகாலம் நாயகன்மாரும் அங்கே ஆண்டுவந்தார்கள். இந்த ஜாதியாரில் ஒருவனுடைய அரசாட்சிகாலத்தில் கப்பப்பணம் செல்லாமற்போய், ஆர்க்காட்டு நபாபும் அதை வாங்கச் சாமர்த்தியமில்லாதவனாயிருக்க, டில்லிச் சக்கரவர்த்தி சைரோப்சிங் என்பவனை செஞ்சிஅதிபதியோடு போர்செய்யும்படி அனுப்பி, பிறகு அவனையே அதற்கு ராஜாவாகவும் நியமித்தான். இவன் செஞ்சியிலிருந்தகாலத்தில், டில்லிச் சக்கிரவர்த்திக்கு பாராஹஜாரி என்னும் பேருள்ள பன்னீராயிரம்வராகன் பெறுமான ஒரு திவ்வியமான குதிரைகிடைத்தது. அதை ஏறிச் சவாரிசெய்ய ஒருவராலும் முடியவில்லை. டில்லிக்குட்பட்ட சிற்றரசர்கள் யாவரும் வந்து அதை அடக்கத் தங்களாலியன்றமட்டும் முயன்றார்கள். அவர்களுடைய பிரயத்தனங்களெல்லாம் வீணாயின. சக்கரவர்த்திக்கோ ஆறாத துக்கம்வந்துவிட்டது; யாரார் குதிரையை வசப்படுத்த முயற்சிசெய்து தோற்றுப்போனார்களோ அவர்களையெல்லாம் சிறையிலடைத்துப் போட்டான். சைரோப்சிங்குக்கும் டில்லிக்கு வரும்படி கட்டளைவர, அவனும் போய் அதே கதியடைந்தான். அவன் டில்லிக்குப்போயிருந்தபோது, கர்ப்பமாயிருந்த அவன் ராணிக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது; இந்தப் பிள்ளைதான் பிற்காலத்தில் தேசிங்குராஜா என்று கீர்த்திபெற்றவன். இந்தக் குழந்தை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வரவர மிக்க தைரியமும் சௌரியமுமுள்ளவனாக விளங்கினான். இந்தச் சிறுவனுடைய சமாசாரம் சக்கரவர்த்திக்கு எட்டி, பாராஹஜாரியை இவனும் ஒருகை பார்க்கட்டுமென்று டில்லிக்கு வரும்படி கட்டளையிட்டான். தாயாகிய ராணிக்குப் பிள்ளையை அனுப்புவிக்கச் சம்மதமில்லை; சிறுவனோ சீக்கிரத்தில்போய் ஜயம்பெற்றுத் தகப்பனை மீட்டுக்கொண்டு திரும்பவேண்டுமென்று ஆவலோடிருந்தான்; அப்படியே போய் தன்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொண்டான். அவன் வெற்றிபெற்ற விதத்தை எப்படி சொல்லுகிறார்களென்றால், யாவரும் நெருங்கமுடியாத அந்தக் குதிரையின்மேல் தேசிங்கு ஏறி உட்கார்ந்ததும், அது உயரப் பறக்கத்தொடங்கி ஆகாயத்தின் வழியே போய்க்கொண்டிருந்தது; சிலநாள் சென்றபின்பு அவன் தனக்கு ஏதோ அபாயம் வரும்போலிருக்கிறதென்று கண்டு தனது இஷ்டதெய்வமாகிய சிங்கபுரத்து ரங்கநாதசுவாமியை உத்தேசித்துத் தியானம்பண்ண, அவர் பிரத்தியக்ஷமாகி பயப்படாதேயென்று அவனுக்குத் தைரியம்சொல்லித் தாம் சிருஷ்டித்த அந்தக் குதிரைக்கு எஜமானன் தேசிங்கு, அவனுக்குட்பட்டு நடப்பது உனது கடமையென்று புத்திகூறி, நீங்கள் இருவரும் பூமியில் உள்ளவரைக்கும் சேர்ந்திருந்து

சுவர்க்கலோகத்துக்கு இருவரும் ஒரேகாலத்தில்போய் சுகித்திருக்கக்கடவீர்கள், என்று அருளி மறைந்துபோனாராம். முன்னே எவ்வளவு கொடியதாயும் முரடாயும் இருந்ததோ அவ்வளவு சாந்தமும் அடக்கமும் உள்ளதாக மாறிப்போன அந்தக் குதிரையோடு தேசிங்கு கீழேவந்திறங்கினான். சக்கரவர்த்திக்குண்டான ஆனந்தமோ இவ்வளவு அவ்வளவல்ல; சிறையிலிருந்த தகப்பனை விடுதலைசெய்து தேசிங்குக்கு அபாரமான மரியாதைகளும் பிருதுகளும் கொடுத்துக் குதிரையையும் அவனுக்கே இனாம்பண்ணி சுதேசத்துக்குப்போக உத்தரவுகொடுக்கும்போது, செஞ்சியின்பேரில் நமக்குள்ள கப்பத்தின் பாத்தியத்தை விட்டுவிட்டோம், இனி நீயே சுதந்தர அதிபதியாக ஆண்டுகொண்டிருவென்று சொல்லியனுப்பினான். சிலகாலம்கழித்து தகப்பனும் இறந்துபோனான்; பிறகு தேசிங்கு சிற்றப்பராஜா என்கிற சிறியதகப்பனுடைய ஒத்தாசையைக்கொண்டுதானே தேசத்தை ஆளத்தொடங்கினான்.

இவ்வளவு சங்கதியும் ஆர்க்காட்டுநபாபுக்குத் தெரிந்திருந்தும், நமக்குமுன்னே கீழ்ப்பட்டிருந்த ராஜா இப்போது நமக்குச்சரியாக சுயாதிகாரம்பெற்று நம்மினும் அதிகமாகச் சக்கரவர்த்தியினிடத்தில் கவுரவமும் அபிமானமும் சம்பாதித்துவிட்டானேயென்கிற பொறாமையினால், தேசிங்கு சிறுபையனாகத்தானேயிருக்கிறான், எளிதில் ஜயித்துப்போடலாமென்றெண்ணங்கொண்டவனாய் வருஷாவருஷம்போலக் கப்பப்பணம்கேட்டான். அதற்குத் தேசிங்கு நம்மிருவருக்கும் மேலான அதிகாரியாகிய சக்கரவர்த்தி உன்னைப்போல் என்னையும் சுயமாக ஆளும்படி அதிகாரம்கொடுத்தது தெரியாதாவென்று பதில்சொல்லியனுப்ப, நபாபு தனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாததுபோல் எங்கே உனக்குக் கொடுத்த அதிகாரசாசனத்தைக் காட்டு பார்ப்போமென்றான். இப்படிப்பட்ட சங்கடங்கள் வருமென்று தெரிந்திருந்தால் தேசிங்கு தான் பெற்ற மரியாதைக்கு சக்கரவர்த்தியின் கையிலிருந்து சாசனம் வாங்கியிருப்பான். அவன் சுத்தவீரனாகையால், எழுத்துமூலமாய் எழுதிக்கொடுக்கும் சாசனத்தைவிட வாயினால் சொல்லும் சொல்லே மேலானதென்றெண்ணியிருந்தான். நபாபு இரண்டாந்தரம் கேட்டபோது, தேசிங்கு மிகவும்* கோபாக்கிராந்தனாய் பணம்வேண்டுமானால் கத்தியெடுத்து யுத்தத்துக்கு வரட்டும், நம்முடைய ராஜ்யத்தில் கற்கள் விஸ்தாரமாய்க் கிடக்கின்றன, சித்தமிருந்தால் நபாபு அவைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லியனுப்பிவிட்டான். இந்தச் சொற்களைக் கேட்ட நபாபுவும் சண்டைக்கு ஆயத்தம்பண்ணினான். பயம் என்பது இன்னதென்றுகூட தெரியாத தேசிங்கோ வழக்கம்போலே தன் வேலையை நடத்திவந்தான். இப்படியிருக்கும்போது ஒருநாள் சத்துருக்கள் வருகிறார்களென்று சொன்னார்கள்; அதை அவன் லட்சியம்பண்ணவில்லை. அப்போது தசராபண்டிகை காலமாகையால் பூஜையிலேயே கவனமாயிருந்தான். சத்துருக்கள் வரவரக் கோட்டைக்குச் சமீபத்தில் வந்துவிட்டார்களென்று அறிக்கைசெய்ய தூதர்கள் ஒருவன்பின் ஒருவனாய் வந்துகொண்டிருந்தார்கள்; அப்போதும் சும்மாவிருந்தான். கடைசியாய்ச் சிற்றப்பராஜாவே வந்து இந்த ஆபத்துவேளையில் பூஜைதானா குறைவாயிருக்கிறதென்று கோபித்துக்கொண்டு நபாபுடன் எந்த நிபந்தனைகளின்பேரிலாவது சமாதானம்பேசுகிறேனென்றான். சமாதானம் என்னும் சொல் தேசிங்குமனதில் நன்றாகத் தைத்தது; அந்த இழிவான சொல்லைக்கேட்கவே கண்களிரண்டும் சிவந்தன. பூஜையைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு சண்டைக்குப் புறப்பட்டான். முதல்முதல்

தன்னுடைய பெண்சாதி இருந்த அந்தப்புரத்துக்குச் சென்றான்; விவாகச்சடங்குகள் இன்னும் நிறைவேறாதபடியால் க்ஷத்திரியர்களுடைய வழக்கப்படி அவளை நேரில் பார்க்கக்கூடாமலிருந்தது; ஆகையால் ஒரு திரையைக் குறுக்கேபோட்டு அவன் ஒருபக்கத்திலும் அவள் ஒருபக்கத்திலுமாக நின்றார்கள். அப்போது அந்தப்பெண் புருஷனைச் சண்டைக்குப்போகவேண்டாம் என்று தடுத்துப்பார்த்தாள்; அவன் கேட்கவில்லை. தேசிங்கு பெண்சாதியினிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு போவதை தமிழ்க்கவியில் வரணித்திருப்பது மிகவும் ரசமாயிருக்கிறது. போய் வரும்படி அனுமதிதருவதற்கு அடையாளமாக வெற்றிலைபாக்குகொடுக்க, அவள் திரையின்கீழ் நீட்டின வளையல் பூண்ட கையைமாத்திரம் அவன் பார்த்தானேயல்லாமல், மற்றப்படி அவளைப் பார்க்கவேயில்லை. அவளும் சௌரியத்தில் புருஷனுக்குக் குறைந்தவளல்ல; அவள் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளென்னவென்றால், நீர் உண்மையான வீரனுக்குத் தக்கபடி மார்பில் காயத்தோடு திரும்பிவரும்பக்ஷத்தில், நான் கவுரவமாயும் மரியாதையாயும் ஏற்றுக்கொள்வேன்; முதுகில் காயத்தோடு திரும்பினால் கோட்டைக்குள் பிரவேசிக்கவொட்டாமல் தடுத்துப்போடுவேன் என்றாள். அப்புறம் தேசிங்கு தனது இஷ்ட தெய்வமாகிய ரங்கநாத சுவாமியினிடத்திற்குப் போய் தான் பிரவேசிக்கிற காரியத்தில் ஜயம் அருளவேணுமென்று பிரார்த்தித்தான். அன்றையதினம் சண்டைக்குப் போகவேண்டாம், ஒருநாளாவது தாமதித்துப்போவென்று சுவாமி அவனுக்குப் பலவிதத்தில் புத்திசொல்லியும், அவன் முன்வைத்தகாலைப் பின்வைக்கமாட்டேனென்று ஒரேபிடிவாதம் பிடித்ததின்பேரில் சுவாமிக்கு வெறுப்பு உண்டாகி அவனைப்பார்க்க பிரியமில்லாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டார். ஆகிலும் தேசிங்கு தன்னுடைய கத்தி இரண்டு மணிகாலமாகிலும் மேற்கையாக இருக்கவேண்டுமென்கிற வரத்தைப் பெற்றுக்கொண்டு அத்துடனே சந்துஷ்டியடைந்து புறப்பட்டான். சிற்றப்பராஜாவும் வந்து அப்போது சண்டைக்குப்போகிறபட்சத்தில் கோட்டைக்குள் வசதியான இடத்தை விட்டுவிட்டு எளிதில் தோற்றுப்போகும்படியான இடத்துக்குப் போகவேண்டியிருக்குமேயென்றுசொல்ல, என்னைக் கிழவனென்று பார்த்தீரோ? பெண்பிள்ளையென்றுபார்த்தீரோ என்று பதில் சொல்லிவிட்டு, வல்தாவூரிலிருந்த தன் தோழனை மகபத்கானுக்கு ஒத்தாசைக்குவரும்படி சொல்லியனுப்பினான். இந்த சமாசாரம் போய்ச்சேர்ந்தபோது மகபத்கானுக்கு கல்யாணம்நடக்கிற முகூர்த்தமாயிருந்தும் ஒரு நிமிஷம்கூட அங்கே இருக்கப்பிடியாமல், தாலிகட்டுவதற்கு பெண் வரத் தாமதித்ததுபற்றி தாலியைத் தன்னுடைய கத்திக்குக் கட்டிவிட்டு குதிரைமேலேறி ஓட்டமாய் ஓடிவந்தான். செஞ்சிக்கு நாலுமைல்தூரமுள்ள பத்தப்பட்டு என்னும் ஊருக்கருகே சண்டைநடந்தது. தேசிங்குவும் மகபத்கானுமாய்ச் சேர்ந்து நபாபுவின் சேனையைச் சின்னாபின்னமாக்கினார்கள்; ஜயம் அவர்கள் பட்சம் திரும்பினது. அப்போது சுவாமிகிருபைசெய்தகாலம் முடிந்துபோய்விட்டது; ஜயம் பெற்றோமென்று கோட்டைக்குத் திரும்பிவரும்போது ஒரு தூதன்வந்து தேசிங்கு யாரை நபாபென்று நினைத்துக் கொன்றுவிட்டானோ அவன் நபாப்ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்தவனேயல்லாமல் வாஸ்தவமாய் நபாபுவல்ல, நபாபு சாகாமலிருக்கிறானென்று சொன்னான். உடனே அதைக்கேட்ட தேசிங்கு திரும்பி நபாபுவுடன் கைகலந்து யுத்தம்செய்யப்போனான். நபாபு உட்கார்ந்திருந்த யானையின்பேரில் பாராஹஜாரி ஏறும்போது யானையின் வயிற்றின்மறைவில் இருந்த ஒருவன் அதன்

கால்களை வெட்டிப்போட்டான்; அப்புறம் தேசிங்கு கீழேநின்று சண்டைசெய்துகொண்டிருக்கும்போது கண்ணுக்குத்தெரியாமல் ஒளித்துக்கொண்டிருந்த ஒருவன் அவனைச் சுட்டுப்போட்டான். இப்படிப்பட்ட வஞ்சகத்தினால் நபாபு வெற்றியடைந்தான். இந்தச் சங்கதிகளையெல்லாம் கேட்ட தேசிங்கினுடைய பெண்சாதி தான் உடன்கட்டையேறுவதற்காகத் தன் புருஷன்தேகத்தைக் கவுரவமாய்ப் பெற்றுக்கொண்டாள். நபாபுவுக்கு இதுதெரிந்து மிகவும் விசனப்பட்டு தன்னுடைய மோசத்தை ஒத்துக்கொண்டு அவளுக்கு வேண்டியதெல்லாம் கொடுக்கிறதாகச் சொல்லி சாகாமலிருக்கும்படி தடுத்துப்பார்த்தான். அதற்கு அவள்: நீர் எனக்கொன்றும் கொடுக்கவேண்டாம்; இஷ்டமிருந்தால் என்பெயரைப் பூமியில் எவ்விதத்திலாவது பிரசித்தப்படுத்திவையும் என்று சொல்லிவிட்டு, செட்டிகுளத்தின் மேல்பக்கத்தில் புருஷனோடு உடன்கட்டையேறினாள்; அவ்விடத்தில் ஒரு கோரியும் கட்டியிருக்கிறது. நபாபு அவள் சொன்னசொல் தவறாமல், ஆர்க்காட்டுக்குச் சமீபத்தில் இப்போது ராணிப்பேட்டையென்கிற ஊருக்குத் தேசிங்குராஜாவினுடைய ராணியின் பெயரைக்கொடுத்து, அவள்பெயர் என்றைக்கும் நினைவுவரும்படியாகச் செய்தான்.

டில்லிமாநகரத்தில் சக்கரவர்த்தினிப் பட்ட விளம்பரத்தைப் பிரசித்தப்படுத்தின சுதினத்தில் இந்திய ராஜப்பிரதிநிதி செய்த உபநியாசம்.

சென்றமாதச் சஞ்சிகையில் சொன்னபடி நாளதுமீ முதல்தேதி டில்லிநகரத்துக்குச் சமீபத்தில் முன்னாளில் சந்திரவம்சத்தரசர்களில் தருமராஜன் பரதகண்டத்தரசர்களையெல்லாம் வரவழைத்து மகாசபை சேர்த்து ராஜசூயயாகம்செய்து புகழ்பெற்று உலகத்திற்கு க்ஷேமத்தை விளைவித்த இடமாகிய புண்ணியபூமியில் ஜயம்பெற்ற இந்திய சக்கரவர்த்தினியவர்களின் பிரதிநிதியாகிய லார்ட் லிட்டன் பிரபு ராஜசபைகூட்டி மகாராணியாருடைய புதுப்பட்டத்தை விளம்பரம்செய்வித்தனர். அத்திருநாளுக்கு முன்னும்பின்னும் நடந்த திரளான ரதகஜதுரகபதாதிகளுடன் சென்ற ஊர்கோலம் முதலிய சிறப்புகளையெல்லாம் விவரித்து எழுத இடமில்லையாகிலும் அந்த மகாராஜசபையில் கவர்னர்ஜெனரல் அவர்கள் செய்த உபநியாசத்தைமாத்திரம் அடியில் தினவர்த்தமானி முதலான பத்திரிகைகளிலிருந்தெடுத்துப் பதிப்பிக்கிறோம்.

1858-ஆம் நொவெம்பர்மீ 1உ இந்திய மன்னர்மீதும் பிரஜைகள்மீதும் அங்கிலேய மகாராணியாரவர்களுக்குள்ள மனநட்பை அமைத்து ராஜவிளம்பரப்பத்திரம் ஒன்று பிரசித்தஞ்செய்யப்பட்டது. அந்த நட்பை அன்றுதொட்டு இன்றளவும் விலையுயர்ந்த அரசாட்சி சம்பந்தமான சொத்தென அவர்கள் காதலித்துப் பரிபாலித்துவருகிறார்கள். ஒருபொழுதும் சொல்திறம்பாத மகாராணியாரவர்கள் அப்பொழுதுசெய்த வாக்குறுதிக்கு உறுதியாகப் பிறர்வாக்கு வேண்டுவதில்லை; பதினெட்டு வருஷமாய் அபிவிர்த்தியாகிவருகின்ற செல்வப்பொழிவு அவ்வாக்கை ஊர்ஜிதப்படுத்துகின்றது. அந்த நல்வாக்கு நிறைவேறியதற்கு இங்கு இன்றையதினம் கூடிய இம்மகாசபை தெளியத்தோன்றும் திர்ஷ்டாந்தமாம். இந்த ராஜ்யத்தின் அரசரும் குடிகளும் தொன்றுதொட்டு உள்ள கௌரவங்களைப் பின்னமின்றி அனுபவித்துத் தங்கள் முறைமையான உரிமைவழியில் தடையறநிற்க ஆதரவுபெற்றுவருவதனால், செல்காலத்தில் தாம்பெற்ற சகாயத்தையும் நீதியையும் கண்டு, எதிர்காலத்தில் தமக்கு எள்ளளவும் குறை நேராதென்று அச்சமற்

திருக்கிறார்கள். மகாராணியாரவர்கள் இந்திய சக்கரவர்த்தினிப்பட்டம் சூடிய மங்களத்தை வெளியிடச் சபைகூடிவந்திருக்கிறோம்; ஆகவே, இத்தேசத்தில் அந்த ராஜராஜாதிகாரியின் பிரதிநிதியாக வந்திருப்பதனால், தொன்றுதொட்டு மகாராணியாரவர்கள் பட்டத்திற்கு வம்சபரம்பரையாயுள்ள பிருது வரிசைகளோடும் கௌரவத்தோடும் இந்த நூதனபட்டத்தை மகாராணியாரவர்கள் மனக்களிப்புடன் சூடிய தாற்பரியம் ஏதென்று விரித்துரைப்பது நமது கடமை. இப்பூவுலகின் விசாலமானதலத்தில் ஏழில் ஒருபங்கு அங்கிலேய மகாராணியாரவர்களுக்கு ஸ்வாதீனமாயிருக்கின்றது. மகாராணியாரவர்கள் பிரஜைகள் தொகை முப்பது கோடி. இம்மகாராஜா தான் பூர்வ ராஜ்யத்தின்மீது உள்ள கனத்த காதலிலும் அதிக காதல் மகாராணியாரவர்களுக்கு ஸ்வாதீனமாயிருக்கின்ற மற்றெந்த ராஜ்யத்தின்மீதும் இல்லை. சர்வதேசகாலங்களிலும் பிரித்தானிய செங்கோலின்கீழ் திறமையும் சிரத்தையும் உள்ள அதிகாரிகள் இருந்தார்கள். இருந்தும், தங்கள் விவேகபூரணத்தாலும் வீரத்தாலும் பிரித்தானிய கிரீடத்திற்கு உரித்தாம்படி இந்திய ராஜ்யத்தை ஜெயித்துக் கைவிடாது காப்பாற்றின உத்தியோகஸ்தரிலும் அதிக பிரபலர் எவரும் இல்லை. இப்பிரபலஜெயம் பெற்றுக்கொள்ள, அதிகாரிகளுடன் ஐரோப்பியரும் சுதேசருமாகிய மகாராணியாரவர்கள் பிரஜைகள் அனைவரும் ஏற்குமாறு எத்தனித்து இசைந்தொழுகினார்கள். அவர்களன்றி, மகாராணியாரவர்கள் துரைத்தனத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்ற மகத்தான அரசரும், கப்பம்கட்டும் குறுநிலமன்னரும் இவ்வருந்தொழிலில் உதவிபுரிந்தார்கள். அவர்கள் சேனைவீரர் மகாராணியாரவர்கள் சேனைவீரருடன் வருந்தி உழைத்து யுத்தஞ்செய்து பெற்ற வெற்றிகளில் பங்கனுபவித்தார்கள். விவேகத்தோடு கூடிய அவர்கள் ராஜபக்தி நிஷ்கலக ஸ்திதியின் வரப்பிரசாதங்களை நிலைநிறுத்தி அபிவிர்த்திசெய்ய மகாராணியாரவர்கள் துரைத்தனத்திற்கு உதவியது. சக்கரவர்த்தினிப் பட்டப்பிரதிஷ்டை இன்று இங்கே பக்திபூர்வமாய் நடந்தேறும் சமயத்தில் அவர்கள் கூடிவந்திருப்பது, மகாராணியாரவர்கள் துரைத்தனம் மிகு நயமுள்ளதென்று அவர்கள் நம்புவதற்கும், இந்த ராஜ்யம் பின்னமின்றி ஒருங்குபொருந்தியிருப்பதில் அவர்கள் சிந்தைகூர்ந்திருப்பதற்கும் சாட்சியாம். முன்னோர் முயற்சியால் சம்பாதித்துத் தமது எத்தனத்தால் உறுதியாய் ஒருங்கு இணைக்கப்பட்டிருக்கின்ற இந்த ராஜ்யத்தை மகாராணியாரவர்கள் தீண்டாமல் பின்னமின்றி காத்துப் பிரதிபாலித்துத் தமது பின்னோருக்கு ஒப்பிக்கத் தக்க மகிமைதங்கிய சுதந்தரமென்று நன்குமதித்திருக்கிறார்கள். இத்தகைமையுள்ள மகத்தான ராஜ்யம் தமது கைப்பற்றில் இருப்பதனால், பிரஜாக்ஷேமத்திற்கும், கப்பம்கட்டும் மன்னர் சுதந்தரத்திற்கும் பின்னமின்றி ஆணைசெலுத்துவது தமது பாரமென்று மகாராணியாரவர்கள் எண்ணியிருக்கிறார்கள். இம்முகாந்தரத்தினாலேயே, தமது மகுடத்திற்கு உரிமையாய் வழங்கிவரும் 'பட்டங்களுடன், அம்மகுடம் இந்திய அரசர் பிரஜைகளின் க்ஷேமலாபங்களோடும் சம்பந்தப்பட்டு அவர் ராஜபக்தியை நாடியிருப்பதற்கு நிலைபேறான 'சின்னமாகத் தக்க மற்றொரு நூதனபட்டத்தைச் சூடும் சித்தம் மகாராணியாரவர்கள் சிந்தையில் உற்பத்தியாயிற்று. இந்தியாவில் அப்போதப்போது அரசாண்ட பற்பல அதிபதிகளைத் திருவுளச்செயலால் பிரித்தானிய துரைத்தனத்தார் விலக்கிக் குறைகளைந்து சீர்திருத்தம் செய்துவருகிறார்களே— அவ்வரசருக்குள் நலமிக்க மகத்தான அதிபதிகள் இல்லாதிருக்கவில்லை, ஆனால், அவர்களுக்குப்பின் பட்டம் ஆண்ட அதிபதிகள் சிலர் தங்கள் ராஜ்யத்தில் நிஷ்கலகஸ்திதியை நிலைநிறுத்த வல்லவர்களல்லாதுபோனார்கள். பிணக்கு எப்பொழுதும் பற்றறாது நடந்துவந்தது. அநாயகஸ்திதி அடுத்துத் தலைப்பட்டது. மெலியோர் வலியாருக்குப் பலியானார்கள். வலியார் தம் ஆசைப்பெருக்கத்திற்குப் பக்ஷணமானார்கள். ஆகவே, மகத்தான தாமர்லேன் ராஜவம்சம் செய்த இடையறாதுள்ள உதிரப்பெருக்கால் பலம் குன்றி, பிரஜைகளுக்குள் நேர்ந்த பெரும்பிணக்கால் நிலையற்று அசைவுற்றது. கீழைக்கண்டமாகிய இந்தியாவின் சீர்த்தேற்றத்திற்கு இவ்வாறு அநுகூலமற்றுப் போனதனால், அது அறுதியில் விழுந்தது. தற்காலத்தில் பக்ஷபாதமின்றி நாளு

ஜாதியாரையும் சமயத்தாரையும் தற்காக்கும் தன்மையுள்ள சட்டதிட்டங்கள் ஏற்பட்டு நடந்தேறுவதனால், மகாராணியாரவர்கள் பிரஜைகள் யாவரும் இலேசமற்றிருந்து அவரவர் ஜாதி சுதந்தரத்தையும் சமய சுதந்தரத்தையும் அனுபவித்து வருகிறார்கள். பிரஜைகள் அவனவன் தன் தன் மதநிபந்தனைகளையும் கிரியைகளையும் திண்டாட்டமின்றி அனுஷ்டித்துவரும்படி துரைத்தனத்தாரால் இடம் கிடைத்திருக்கின்றது. சக்கரவர்த்தினி அதிகாரமென்னும் பலத்த கரம் நீளுவது நொறுக்கவல்ல, ஆதரித்து வழிகாட்ட. பிரித்தானிய துரைத்தன நலத்தால் விளையும் சித்திகளை, நம்மைச் சூழ நான்கு திக்கும் தேசாத்தியந்தம் விரைந்து அபிவிர்த்தியாகும் நாகரிகத்தினாலும், செல்வப்பெருக்கினாலும் திர்ஷ்டாந்தபூர்வகமாய்க் காணலாம்.

பிரித்தானிய ராஜாதிகாரிகளும், உண்மையுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தருமானவர்களே,—இந்த நற்சித்திகள் முக்கியமாய் விளைந்தது நீங்கள் இடையறாது வருந்தி உழைத்ததினாலேயே. மகாராணியாரவர்கள் நாமத்தை மேற்கொண்டு உங்கள் அதிபதியின் நன்றியையும் நம்பிக்கையையும் நாம் இப்பொழுது முந்தச் சொல்வது உங்களுக்கே. உங்கள் முன்னோராகிய கனமிக்க அதிகாரிகளுக்கு உறுதியில் நீங்கள் இளைத்தவர்கள் அல்ல. பூர்வ சரித்திரத்தில் இணைசொல்வதற்கரிய தணியா மனவலியுடன், உலகறியப்பெற்ற நற்குணநற்செய்கைகளால் செய்கருமத்திற் சிரத்தைபூண்டு, இம்மகத்தான ராஜ்யத்தின் நலத்தைக் கண்ணுக்குக்கண்ணாய் விரும்பி மெய்வருந்தி உழைத்தீர்கள். கீர்த்தி என்னும் ஆலயத்தின் வாசல் யாவருக்கும் திறந்திருக்கிறதில்லை; ஆனால், நன்மைசெய்ய நாடும் எவனுக்கும் சமயம் இல்லாதிராது. உத்தியோகஸ்தரைப் பதவியில் விரைந்து உயர்த்தும் அதிகாரம் எவ்வகைத் துரைத்தனத்திற்கும் பெரும்பாலும் இல்லை. ஆனால், பிரித்தானிய அரசாட்சி உத்தியோகஸ்தர்கள் முக்கியமாய்க் கௌரவத்தையும் உயர்ந்த சம்பளத்தையும் நாடியல்ல, அவரவர் செய்கடனையும் சிரத்தையையும் நினைந்தே உத்தியோகம் நிர்வகித்துவருகிறார்களென்று நம்புகிறோம். இந்திய அரசாட்சி கர்மத்தில் முக்கியமான அரியவேலைகள் அநேகம், உயர்பதவிபெற்ற உத்தியோகஸ்தராலல்ல, நாட்டகத்தில் உள்ள கீழ் உத்தியோகஸ்தரால் எப்பொழுதும் நடந்தேறின; இன்னும் எப்பொழுதும் நடந்தேறவேண்டும். அவர்கள் பதைப்பற்று அச்சமின்றிப் புத்திபூர்வமாய் உழைத்ததனாலேயே அரசாட்சிகாரியம் சித்தியாய் நடக்கின்றது. ஸிவில்-ராணுவம் இருவகுப்பு உத்தியோகஸ்தர்களும் இந்தியாவில் எவ்வெவ்விடத்திலும் செய்தற்கரிய மிகு சங்கடமும் சூக்ஷமமுமான காரியங்களை வியக்கத்தகுமாறு சாதித்ததைப்பற்றி மகாராணியாரவர்கள் உள்ளத்தில் பிறந்திருக்கும் நன்றியுணர்ச்சியை நாம் எவ்வளவு வற்புறுத்தி வெளியிடினும் ஏற்கும். முதிராப் பருவத்தில் பாரம்பழி மெத்தவும் உள்ள பதவிகளில் அமர்ந்து வருந்திப் பயிலும் சிக்ஷையை மனம்குளிர்ந்து சிரத்தையுடன் பயில வலிய உடன்பட்டு, வேறுபாஷை பேசி, வேறுமதத்தை அனுசரித்து, வேறு தேசாசாரங்களைச் சார்ந்தொழுகும் அன்னிய மனுஷருக்குள் வாசமாயிருந்து, பிரதான அரசாட்சி உத்தியோகங்கள் நிர்வகித்துவரும் ஸிவில்-ராணுவ வகுப்பைச்சேர்ந்தவர்களே, நீங்கள் உன்னதமான உங்கள் ஜாதிக்குறியை இவ்வாறு காப்பாற்றி, உங்கள் மதத்தின் ஜீவானுகூலமான கற்பனைகளைக் கைக்கொண்டுவருவதுமன்றி, இத்தேசத்தில் உள்ள சகல மதஸ்தருக்கும் ஜாதியாருக்கும் உத்தம துரைத்தனத்தால் விளையும் பாரிய பயனையும் கொடுத்துவருகிறீர்களென்று நெஞ்சார அறிந்து, உங்கள் பாரதூரமான செய்கடனை மன உறுதியோடு பதைப்பற்று ஆறியிருந்து செய்துமுடிக்கக்கடவீர்கள். மேற்குக் கண்டத்தாராகிய ஐரோப்பியருடைய நாகரிக மூலாதாரங்களைச்சார்ந்து, இந்தியாவின் அளவற்ற விளைபொருள்வகையைத் தடையின்றி அபிவிர்த்திசெய்து புண்ணியம் கட்டிக்கொண்டவர்கள் துரைத்தன உத்தியோகஸ்தர்மாத்திரம் அல்ல, இந்தியாவில் வசிக்கும் உத்தியோகஸ்தரல்லாத ஐரோப்பிய பிரஜைகளுந்தான். அவர்கள் பிரித்தானிய சிங்காதனத்தின்மீதும், மகாராணியாரவர்கள் பெயரிலும் பக்தியுள்ளவர்களாயிருப்பதையும், அவர்கள் கைத்தொழில் முயற்சி, தேசானுகூலமான ஊக்கம், சுகுண சுகிர்தங்களால் இந்திய ராஜ்யத்திற்கு மிக்க பயன் விளைவதையும்பற்றி மகாராணியாரவர்களுக்கு உண்

டாயிருக்கின்ற மிகு மனோதிர்ப்தியை நாம் இச்சமயத்தில் வற்புறுத்திச்சொல்லாது விடுவோமானால், மகத்வமிக்க ராணியவர்கள் உள்ளத்தில் பிறந்திருக்கும் கனிவான நினைவுகளை அறைகுறையாய் வெளியிடும் தோஷம் நமதுமேற் சாரும். தமது துரைத்தனம் நடந்தேறும் பலதேசங்களில் முக்கியமென வியக்கத்தகும் இத்தேசத்துப் பிரஜைகள் சிலருடைய உத்தியோகசம்பந்தமான அருந்திறமையையும், நற்குண நற்செய்கைகளையும் பகுத்தறிந்து பலவாறு குறிப்பிக்கவிரும்பி, மகாராணியாரவர்கள் இந்திய நக்ஷத்திரப்பட்டத்தையும், பிரித்தானிய இந்திய வரிசைக் கிரமப்பட்டத்தையும் அபிவிர்த்திசெய்யவும், இந்திய ராஜ்ய வரிசை எனப் பெயர்வழங்கும் நூதன பட்டம் ஒன்றை ஏற்படுத்தவும் சித்தங்கொண்டிருக்கிறார்கள்.

பிரித்தானியரும் சுதேசருமாகிய இந்திய-ராணுவ அதிகாரிகளே, சேவகரே, அக்கம் பக்கமாய் நின்று யுத்தஞ்செய்து மகாராணியாரவர்கள் படைக்கலத்தின் கௌரவத்தைப் பங்கமின்றி நீங்கள் ஆதரித்த பிரதிசமயத்திலும் வீரம்குன்றாமல் நீங்கள்செய்த அருந்தொழிலை நினைந்து மகாராணியாரவர்கள் மனம் பூரித்திருக்கின்றது. இதற்குமுன் உள்ளபடி இனிமேல் எப்பொழுதும் நீங்கள் மனோவாக்கு ஒத்து பக்திபூர்வமாய் உங்கள் உயர்ந்த செய்கடனை நன்றாய்ச் சாதிப்பீர்களென்று நம்பி, மகாராணியாரவர்கள் தமது இந்திய துரைத்தனத்தின் நிஷ்கலகஸ்திதியை நிலைநிறுத்தி, செல்வத்தையும் க்ஷேமத்தையும் காக்கும் மகத்தான கிரியையை உங்கள்வசமே ஒப்பித்துவிடுகிறார்கள்.

கைமாறின்றி ராணுவசேவகம்செய்ய வலிய மனம்பொருந்தி வந்தவர்களே,—ஆபத்து உண்டாம்பொழுது முறைமையாய்ச் சிட்சைபயின்று தளத்திற்சேர்ந்த சேவகருடன் ஒருமையாய்க் கூடி யுத்தஞ்செய்யும் திறமுடையோராக ராஜபக்தி சித்தியோடு நீங்கள் செய்துவரும் எத்தனங்களை மகாராணியாரவர்கள் நினைந்து இதயம் குளிர்ந்திருப்பதை இந்தச்சமயத்தில் எடுத்துரைக்கிறோம்.

இந்த ராஜ்யத்தின் அரசர், குறுநிலமன்னர், பிரதானிகள் முதலானவர்களே,—உங்கள் ராஜபக்தி இந்த ராஜ்யபலத்திற்கு உறுதி, உங்கள் செல்வம் அலங்காரத்திற்கு வருவழி. இந்திய ராஜ்யக்ஷேமத்திற்கு யாதாயினும் விக்னம் நேரிடுமானால், நேரிடுமெனத் தோன்றுமானால், விக்கினமின்றி இதை ஆதரித்துக்கொள்ளத் தமது துரைத்தனத்திற்குக் கங்கணம்கட்டித் துணைநிற்பீர்களென்று மனம்தேற நம்பி, மகாராணியாரவர்கள் உங்களுக்கு நன்றிசொல்லுகிறார்கள். மகாராணியாரவர்கள் நாமத்தை முன்னிட்டு, டில்லிநகரத்தில் வந்திருக்கும் உங்களைச் சிந்தை மகிழ்ந்து வாழ்த்துகிறோம். இவ்வருஞ்சமயத்தில் நீங்கள் இங்கெழுந்தருளியிருப்பது, ஏற்கென அங்கிலேய இளவரசர் இத்தேசத்திற்கு வந்துபோன சமயத்தில் உங்கள் வாக்கினின்று பிறந்த மனப்பற்றுறுதி கற்பனையல்ல, உள்ளது என்பதற்குப் பிரத்தியக்ஷமான சாட்சியாம். மகாராணியாரவர்கள் தமது க்ஷேமாதிசயங்களும் உங்கள் க்ஷேமாதிசயங்களும் ஒன்றென மதிப்பிடுகிறார்கள். இப்பொழுது பிரித்தானிய மகுடத்தையும், கப்பம்கட்டும் மன்னரையும், சம்பந்திகளாகிய வேந்தரையும் வளமுற இணைக்கின்ற சம்பந்தங்களின் உறுதியை ஊர்ஜிதப்படுத்தி நிரந்தரமாய் நிலைபெறுவிக்க விரும்பியே, மகாராணியாரவர்கள் இன்று இங்கே நாம் பிரசித்தப்படுத்துகின்ற சக்கரவர்த்தினிப் பட்டத்தைச் சூடிக்கொள்ள மனக்கனிவோடு சித்தங்கொண்டார்கள்.

இந்திய சக்கரவர்த்தினியின் பிரஜைகளாகிய சுதேசரே,—இந்திய சக்கரவர்த்தினி துரைத்தனத்தை இடையறாது ஆதரித்து நிலைநிறுத்த இந்திய அரசாட்சி தர்மம் இன்றியமையாது. அந்தத் தர்மத்தின் மூலாதார விதிகளைத் திட்பநுட்பமாய்ப் பயின்று பண்பட்டிருக்கின்ற அங்கிலேய உத்தியோகஸ்தரின் அரசாட்சி நிர்வாகம், இந்த ராஜ்யத்தின் தற்கால ஸ்திதிக்கும், நிலைபேறான க்ஷேமத்திற்கும் இல்லாமல் தீராது. அரசாட்சிவிஷயத்தில் இந்தியாவிற்கு மகத்துவம் உண்டாக்குவது நாகரிகம். வரவர இந்த ராஜ்யத்தின் பலத்தை முதிர்விக்கும் அந்தரங்கமும் அதே இந்த நாகரிகமும் இடையின்றி நாளொருவண்ணம் அபிவிர்த்தியாகிவருவது, முக்கியமாய் மேற்குறித்த மந்திரிகள் தந்திரிகள் புத்திபூர்வமாய்

ஆலோசித்தறிந்து ராஜ்யபாரம் தாங்கிவருதனாலேதான். தற்காலத்தில் நிஷ்கலக ஸ்திதியிலும் யுத்தத்திலும் ஐரோப்பாவிற்கு ஒப்பற்ற மேன்மை உண்டாயிருப்பது, மேற்குக்கண்டத்தில் வழங்கும் வித்தையும் கல்வியும் தீர்ந்த சிக்ஷையுமே. இவைகள் இத்தேசத்துப் பிள்ளைகள் சமஸ்தருக்கும் சமுதாயக்ஷேமம் உண்டாம்படி, இந்தக் கீழ்க்கண்டத்தில் தடையறப் பெருகும்வண்ணம், மேற்குறித்த அதிகாரிகளே விவகாரத்தில் முக்கியமான கால்வாய்களை முன்போல இன்னும் நெடுங்காலம் வெட்டிவிட்டு ஆதரித்துவரவேண்டும். இந்தியாவிற் பிறந்துவளர்ந்த உங்கள் தேசாசார குலாசார மதாசாரங்கள் ஏதேதாயிருப்பினும், உங்கள் சாமர்த்தியத்திற்கும் திறமைக்கும் தக்கபடி உங்கள் தேச அரசாட்சி நிர்வகிக்கும் தொழிலில் சுதந்தரமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். இந்தச் சுதந்தரத்திற்கு அஸ்திவாரம் உன்னத நீதி. இச்சுதந்தரம் உள்ளதென்று, பிரித்தானியாவிலும் இந்தியாவிலும் இருக்கின்ற பிரபலரான மந்திரிகள் தந்திரிகளாலும், பார்லிமெந்து சபையில் பிறந்த சட்டதிட்டங்களாலும், ஒருமுறையல்ல, அடுத்துப் பலமுறை வாக்குறுதி பிறந்திருக்கின்றது. அன்றியும், இச்சுதந்தரத்தை நன்குமதித்துக் காப்பாற்றிவருவது தமக்குக் கௌரவமென்றும், தமது அரசாட்சி தர்மத்திற்கு இணக்கமென்றும் இந்தியதுரைத்தனத்தார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனதுபற்றி, பின்னிட்டுச் சில வருஷகாலமாய்ச் சுதேச உத்தியோகஸ்தர்கள், முக்கியமாய் உயர் பதவிபெற்றவர்கள் நெறி குறி வரவரத் தேறுவதுகண்டு இந்திய துரைத்தனத்தார்க்குத் திருப்தி உண்டாயிருக்கின்றது. இம்மகாராஜ்ய அரசாட்சியின் நேர்த்திக்கு அங்கிலேய அதிகாரிகளுடன் ராஜ்யபாரம் தாங்குவதில் சம்பந்தப்பட்டிருக்கின்ற சுதேசிகள், கல்வியில் வல்லவர்களாயிருப்பதுமன்றி, நற்குண நற்செய்கைகளிலும் பெருந்தகைமையிலும் முதிர்ந்தவர்களாகவும் இருக்கவேண்டும். ஆனதுகொண்டு, பிறப்பினாலும், குலத்தினாலும், வமிசபரம்பரையாயுள்ள செல்வாக்கினாலும் இத்தேசத்தில் உங்கள் தலைவராயிருக்கும் பெரியோர், இனித் தமக்கு அமையுமெனத்தோன்றும் இந்தக் கௌரவபதத்திற்குத் தம்மையும் தம் புத்திரர் பௌத்திரர் முதலியவர்களையும் யோக்கியதையுள்ளவர்களாக்கவேண்டும். இந்த யோக்கியதை அவர்களுக்கு உண்டாவது கல்வியால். கல்விகற்றுத் தெளிந்தால், அவர்கள் சக்கரவர்த்தினியாகிய மகாராணியாரவர்கள் துரைத்தனத்தாரால் நிலைபெறாய் ஆதரிக்கப்படுகின்ற மூலாதார விதிகளை உள்ளாழ்ந்தறிந்து அனுசரித்து நடக்க வல்லவராவார்கள். ராஜபக்தி, மாசுமறுவின்மை, நிஷ்பக்ஷபாதம், சத்தியம், தீரம் எனும் அவயவம் ஐந்துள்ள உலகறியப்பெற்ற உன்னத சுகிர்தப் பிரமாணத்தை உங்கள் ஒழுக்கத்தின் பிரமாணமாக நீங்கள் அனைவரும் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். இவ்வண்ணம் செய்வீர்களானால், இந்திய சக்கரவர்த்தினி துரைத்தனத்தார் அரசாட்சித்தொழிலில் தம்முடன் உங்களை இதயக்கனிவோடு சேர்த்துக்கொள்வார்கள். பிரித்தானிய துரைத்தனம் ஏற்பட்டிருக்கின்ற எந்தெந்தத் தேசத்திலும் துரைத்தனத்தார் தமக்கு விசேஷ பலமென்றிருப்பது, முக்கியமாய்ச் சேனாபலமல்ல; பிணக்கின்றி இணங்கி மனக்குறை தவிர்ந்து மனப்பூர்வமாய் ராஜபக்தியுள்ள பிரஜாபலமே. இக்குறியுள்ள பிரஜைகள் சிங்காதனத்தைச் சூழ்ந்துநிற்பது, அச்சிங்காதனமே தங்கள் சர்வகாலக்ஷேமத்தின் நிலைபெறான ஸ்திதியென்று உள்ளூற நினைந்திருப்பதனாலேதான். சக்கரவர்த்தினியவர்கள் இந்திய ராஜ்யத்தைச் செல்வமுதலிய பலவகைப் பேறுகளில் வரவர விர்த்திப்பிக்க உதவுமென்று நினைந்திருக்கும் சாதனம், பலக்ஷயமான தேசங்களைச் சண்டைசெய்து கட்டிக்கொள்வதல்ல, அயற்பிரதேசங்களைத் தமது எல்லைக்குள் சேர்த்துக்கொள்வதுமல்ல; இந்திய பிரஜைகள் வரவர அறிவுதெளிந்து தேறி, சாந்தமாகவும் நீதியாகவும் ராஜ்யாதிகாரம் செலுத்தும் உத்தியோகஸ்தர் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவதே. ஆனாலும், மகாராணியாரவர்கள் க்ஷேமமும் செய்கடனும் அவர்கள் துரைத்தன எல்லைக்குள்மாத்திரம் அடங்கியிருக்கவில்லை; இந்த ராஜ்யத்தின் எல்லையை அடுத்திருக்கின்ற பிரதேசங்களின் அதிபர்களுடன் கபடமின்றி ஐக்கியசம்பந்தம் நிலைநிறுத்திக்கொண்டுவருவது மகாராணியாரவர்கள் சித்த அபேக்ஷையாயிருக்கின்றது. அவ்வதிபதிகள் இத்தனைகாலம்

இங்கிலீஷ் துரைத்தன நிழலில் ஒதுங்கி அச்சமற்று ஸ்வாதீனராயிருக்கிறார்கள். பிரித்தானிய துரைத்தன சாந்திக்கு அன்னிய அரசரால் எப்பொழுதேனும் விக்னம் நேர்ந்தால், தமது மகத்தான சுதந்தரமாகிய இந்த ராஜ்யத்தைப் பழுதின்றி ரக்ஷிக்கும் வகை இந்திய சக்கரவர்த்தினியவர்களுக்குத் தெரியும். புறம்பிலுள்ள அரசர் எவராவது இந்தியாவில் பிரித்தானிய ராஜ்யத்தைத் தாக்கநேர்ந்தால், இங்கே சீர்த்திருத்தமுள்ள பிரஜைகள் மன்னர்கள் அனைவரும் பிரித்தானிய ராஜ்யத்திற்கு நேர்ந்த பகை தமக்கும் பகையென்றே ஆக்கிரமித்து எழும்புவார்கள்; சக்கரவர்த்தினியவர்கள் குடைநிழற்கீழ் இருக்கும் பிரதேசங்களின் செல்வப்பொருள்வகை குறையின்றிப் பெருகி, சம்பந்த மன்னரும், கப்பம்கட்டும் வேந்தரும் மாற்றானுக்கு அஞ்சாமல் ராஜபக்தராகிப் பிரஜைகள் அனைவருக்கும் மகாராணியாரவர்கள்மீதுள்ள மனக்கசிவும் பக்தியும் முதிர்ந்ததனால், இந்த ராஜ்யத்தில் படையெடுத்துவரும் எந்த மாற்றானையும் தலைநிமிரவொட்டாமல் முறியடித்து ஓட்டும் பலமான யுத்தாயுதவர்க்கத்திற்குச் சமானமாயிருக்கின்றன. இன்றிங்கே மகாராணியாரவர்கள் சக்கரவர்த்தினிப்பட்டம் சூடும் சுபகாரியத்தைப் பாராட்டிக் கொண்டாடும்பொருட்டு, வெகுதூரகாதத்தில் உள்ள அதிபதிகள் தங்கள் பிரதிநிதிகளை இந்த ராஜசபைக்கு அனுப்பியிருப்பதனால், இந்திய துரைத்தனத்தார் கோட்பாடு அனைத்தும் எவரெவர்க்கும் சம்மதமென்றும், இதரமன்னர் யாவரும் இந்திய துரைத்தனத்தாருடன் பிணக்கின்றி இணக்கமாயிருக்கிறார்களென்றும் பிரத்தியக்ஷப்படுகின்றது. கிலத்கான் அதிபதிக்கும், இந்திய சக்கரவர்த்தினியுடன் ஆசியாகண்டத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்ற அதிபதிகள் அனுப்பிய ஸ்தானாதிபதிகளுக்கும், நமது கனமிக்க அதிதியாக வந்திருக்கின்ற கோவைப்பிரதேசத்து கவர்னர் ஜெனரலவர்களுக்கும், இதர புறத்தேச ஸ்தானாபதிகளுக்கும், இந்த ராஜசபைக்கு இதயபூர்வமாய் முந்தவே வந்து சேர்ந்ததுபற்றி, இந்திய துரைத்தன நாமத்தை மேற்கொண்டு வந்தனம் சொல்லுகிறோம்.

இந்திய அதிபதிகளே, பிரஜைகளே,—உங்கள் சக்கரவர்த்தினியாகிய மகாராணியாரவர்கள் உங்களுக்கு நமது வாக்குமூலமாய் அறிக்கைசெய்ய இன்று காலையில் மின்தபாலில் அனுப்பிய நல்விசேஷத்தை மனம்கனிந்து சொல்லுகிறோம் கேளுங்கள்:—

"தேவகாருணியத்தால் ஐக்கியராஜ்யத்தின் ராணியும், இந்திய சக்கரவர்த்தினியுமாகிய விக்டோரியா எனும் நாம் இப்பொழுது டில்லியில் சபைகூடியிருக்கின்ற ஸிவில்-ராணுவ அதிகாரிகள், வேந்தர், குறுநிலமன்னர், பிரஜைகள் சமஸ்தருக்கும் நமது பிரதிநிதி வாக்குமூலமாய் ராஜ மகத்வ வந்தனம் சொல்லி, இந்திய ராஜ்யத்தில் வாழும் குடிகள்மீது நமக்கு நெஞ்சம்கனியக் காதலும் நேசமும் பெருகுவதை அறுதியிடுகிறோம். நமது அன்புள்ள மைந்தனை அவர்கள் பரிவுகூர்ந்து ஏற்று உபசரித்ததைக் கண்டு இதயம் உருகிக் களிகூர்ந்து, அவர்களுக்கு நமது குடும்பத்தின்மீதும் சிங்காசனத்தின்மீதும் உள்ள பக்தியையும் பற்றையும் திர்ஷ்டாந்தபூர்வமாய் அறிந்து நமது உள்ளம் ஆனந்தசாகரத்தில் முழுகியது. இந்த நற்சமயத்தால் நாமும் நமது பிரஜைகளும் முன்னிலும் அதிக நேசபாசத்தால் பந்திக்கப்படுவோமென்றும், பெரியோர்முதல் சிறியோர்வரையில் அனைவரும் நமது குடைநிழற்கீழ் முக்கியமான சுகாதாரமாகிய சுதந்தரமும் நடுவுநிலையும் நீதிபரிபாலனமும் தழைக்குத் தடையற அமைந்திருப்பதையும், அவர்கள் சுகத்தைப் பெருக்கி, செல்வத்தை விர்த்திசெய்து, க்ஷேமத்தை முதிர்விப்பதே நமது துரைத்தனத்தின் என்றும் ஒழியாத கருத்தும் நோக்கமுமாயிருப்பதையும் உள்ளம் தேறக் கண்டறிவார்களென்றும் நம்புகிறோம்."

கருணைகூர்ந்து சக்கரவர்த்தினியவர்கள் மொழிந்த இம்மதுரவாக்கை நன்கு மதிப்பீர்களென்று ஐயமற நம்புகிறோம்.

அங்கிலேய ஐக்கிய ராஜ்யத்தின் அரசியும், இந்தியாதேசத்துச் சக்கரவர்த்தினியுமாகிய விக்டோரியா மகாராணியாரவர்களைக் கடவுள் ரக்ஷிப்பாராக. அவர்களுக்குத் தெய்வகடாக்ஷம் பரிபூரணமாகுக.

சிறுவர்க்கான கதை.

காட்டில் கண்வளர்ந்த பெண்ணரசி.

முற்காலத்தில் ஒரு தேசத்தில் ஒரு அரசன் தன் ராணியோடு அரசாண்டுவந்தான். அவன் பிள்ளையில்லாமல் நெடுநாள் விசனமடைந்திருக்கையில், வெகுகாலத்துக்குப்பின்பு தெய்வகிருபையால் ஒரு பெண்பிள்ளை பிறந்தது. அதனால் அரசன் ஆனந்தமடைந்து, அக்குழந்தைக்கு ஞானோபதேசஞ்செய்வதற்காக தேவலோகத்திலிருந்து ஏழு தேவதைகளை வரவழைத்து, வெகு சம்பிரமத்தோடு ஜாதகருமநாமகரணங்கள் செய்வித்து, பிறகு அவ்வேழு தேவதைகளுக்கும், தான் முன்னமே வேண்டுமென்று செய்வித்திருந்த நவரத்தினங்கள் இழைத்த பொற்கிண்ணங்களில், போஜனம் அளித்துக்கொண்டிருக்கிற தருணத்தில், நெடுநாளாய் இருக்குமிடந்தெரியாமையால் முன்னுடி அழைக்கப்படாமலிருந்த மற்றொரு தேவதை, தானே அங்கு வந்துநின்றாள். அதுகண்டு, ராஜா தான் முன் ஏழே பொற்பாத்திரம் பண்ணுவித்திருந்ததனால், அவளுக்குச் சாதாரணமான ஒரு பாத்திரத்தில் போஜனமிட்டான். அதனால் அவள் கோபங்கொண்டு அக்காலத்துக்கு ஒவ்வாத சில அசுபமான வார்த்தைகள் சொல்ல, அது மற்றொரு தேவதையின் காதில் விழவே, இவள் குழந்தையை வாழ்த்துதல் செய்யவேண்டியதருணத்தில் சாபமிடுவாள் போலே காண்கிறது. ஆதலால் இவள் சாபத்தையும் மாற்றும்படி நாம் கடைசியில் வாழ்த்தவேண்டுமென்று, அவள் தனியே ஒரு புறமாய் நின்றுகொண்டிருந்தாள்.

மற்ற ஆறு தேவதைகளும் கிரமமாய் அக்குழந்தைக்கு அனுக்கிரகஞ்செய்தார்கள். இந்தப் பெண்குழந்தை உலகத்தில் ஒப்பில்லாத அழகுள்ளவளாகவும், தேவர்கள்போல் மதுரமான குணமுள்ளவளாகவும், பார்ப்போர் ஆவலோடு கொண்டாடத்தக்க தன்மையும் எல்லாரிடத்திலும் அன்பும் ஆதரவுமுள்ளவளாகவும், குயில்போல் பாடத்தக்க குரலுடையவளாகவும், நயமாய் நடனஞ்செய்யத்தக்க திறமுடையவளாகவும், இப்பூமியில் எல்லாப் பெருமைகளையும் பெறத்தக்கவளாகவும் ஆகக்கடவளென்று ஆறு விதமாக ஆறுபேர்களும் ஒவ்வொருவராய் ஆசீர்வாதம்செய்தபிறகு, அழையாவிருந்தாய் வந்த மற்றொருவள், குழந்தையண்டை

வந்து, நல்லது என்று தலையசைத்துக்கொண்டே இப்பெண் தையல்வேலை கற்றுத் துணிதைத்துக்கொண்டிருக்கும்போது கையில் ஊசிபொத்து இறந்துபோவாள் என்று சாபமிட்டாள். அந்தத் தீயசொல்லைக் கேட்கவே அங்கு வந்திருந்தவர்களெல்லாரும் நடுநடுங்கிப்போனார்கள். இரக்கமான நெஞ்சுள்ள சிலர் பரிதாபமாய்ப் புலம்பத்தொடங்கினார்கள். அக்குழந்தையின் தாய்தந்தையர்கள் மூர்ச்சைபோய்விழுந்தார்கள். அத்தருணத்தில் மறைந்துகொண்டிருந்த புத்திமதியான தெய்வப்பெண் அவர்கள் எதிரே வந்து நின்று, ஓ கனம்பொருந்திய பெரியோர்களே! நீங்கள் விசனமடையவேண்டாம். இந்தப் பெண்குழந்தை இறந்துபோகமாட்டாள். ஆயினும், நான் எனக்கு மூத்தவராகிய இவரிட்ட சாபத்தைத் திருப்ப வல்லவளன்று. இப்பிள்ளைக்கு வயதுவந்தபிறகு கையில் ஊசிதைக்காமலிராது; ஆயினும் மரிக்கமாட்டாள். இவர் சாபம் வீண்போகாதாகையால் நூறுவருஷகாலம் பிரஞ்ஞை தப்பி நித்திரைபோனவள்போல் இருப்பாள். அப்புறம் ஒரு ராஜகுமாரன் கண்டு இவளை எழுப்புவான். அவனை விவாஹஞ்செய்துகொண்டு அவனோடு நீடூழிகாலம் சுகமடைந்து வாழ்ந்திருப்பள் என்று அநுக்கிரகித்துவிட்டு மற்றவர்களோடு மறைந்துபோயினாள்.

அந்தச் சுபகாரியம் நிறைவேறினபின்பு, அரசன்: இதென்ன விபரீதம்! நமது பெண்ணாவது ஊசிதைத்து இறந்துபோகவாவது என்று நினைத்து, தன் தேசத்தில் ஒருவரும் தைக்கக்கூடாது; தைக்கிற கருவி யாரிடத்தில் காணப்படுகிறதோ அவர்களை உடனே பிடித்துக் கொலைசெய்யவேண்டுமென்று வெகு கண்டிப்பாய்க் கட்டளையிட்டிருந்தான். யார் என்னதான் செய்யட்டும், தேவசாபம் வீண்போகுமா? அந்தப் பெண்ணுக்குப் பதினைந்து வயதான பின்பு ஒருநாள் ராஜாவும் ராணியும் இல்லாதவேளையில், அவள் சிறைச்சாலைமுதலிய விடங்களை விநோதமாய்ப் பார்த்துக்கொண்டு வரும்போது, அங்கே ஒரு உப்பரிகையில் ஒரு கிழவி நூல்நூற்றுத் தைத்துக்கொண்டிருக்க, அதைக் கண்டு அந்த ராஜகுமாரி வியப்படைந்து, தான் அதை வாங்கித் தட்டித் தடுமாறித் தைக்கப்புகவே, ஊசி கையில் பொத்து மூர்ச்சையடைந்தாள். அந்தக் கிழவி அதைப்பார்த்து பயந்து பெருங்கூச்சலிட்டுப் புலம்ப, அருகிலிருந்தவர்களெல்லாம் திடுக்கிட்டு ஓடிவந்தார்கள். அவளுக்கு முகக்களை சிறிதும் வாடவில்லை. சுவாசமும் மெதுவாய்

வந்துகொண்டிருந்தது. ராஜாவும் ராஜாத்தியும் அதை வந்துபார்த்து, இனி நாம் இதற்குச் செய்யவேண்டுவதொன்றுமில்லை; தெய்வவிதிப்படி நடந்துவருமேயல்லாது வேறில்லை. நூறுவருஷமான பின்பு இவளுக்குப் பிரஞ்ஞையுண்டாகும்; ஆயினும் அந்தக்காலம் வருமளவும் நாமிருந்து அதைப் பார்க்கப்போகிறதில்லை என்று விசனமடைந்து, ஒரு அறையில் சிறந்த மெத்தையில் அப்பெண்ணையெடுத்துப் படுக்கவிட்டுக் கதவைச்சாத்திப் பூட்டிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்கள். அவளும் ஒரு தெய்வப்பெண்போல் தூங்கிக்கொண்டிருந்தாள்.

இந்தச்சமயத்தில் இப்பெண்ணுக்கு மரணமுண்டாகாதபடி அனுக்கிரகித்த அன்புள்ள தெய்வப்பெண், முப்பத்தாறுயிரம் மைல் தூரத்திலிருந்தாள். இச்செய்தியைக் கேள்வியுற்றவுடனே அவள் பூதகணங்கள் பூட்டப்பட்ட அக்கினிரதத்தில் ஏறிக்கொண்டு அதிவேகமாய் அந்தப் பட்டணம்வந்துசேர, அந்த அற்புதத்தை ராஜா பார்த்துத் திகைத்தவனாய் அரண்மனை வாயிலண்டைபோய் நின்று வாடினமுகமாய் அந்தத் தேவதையைக் கைகொடுத்துத் தேரினின்றுங் கீழேயிறக்கினான்.

ராஜன் தன் குமாரிக்கு நடந்த விபத்தைச் சொல்லக்கேட்டு, அந்தத் தெய்வப்பெண்: தானும் அதற்காகக் கொஞ்சநேரம் துக்கித்து அரசனைத் தேற்றிப் பின்பு, தான் முக்காலமுமுணர்ந்தவளாதலால், ஒரு நூற்றாண்டுகழித்தபின் இப்பெண் எழுந்திருக்கும்போது அண்டையில் ஒருவரும் இல்லாமலிருந்தால் பயந்துபோவாள் என்று நினைத்து, அரசன் அரசி இருவர்தவிர மற்ற அவ்வரமனையிலுள்ளோர் யாவரையும் தன் கையிலிருந்த மந்திரத்தடியினால் தட்ட, யாவரும் அப்பெண்போலவே நித்திரைகொண்டார்கள். ராஜதம்பதிகளிருவரும், அங்கசேஷ்டைகள் ஒன்றும் இல்லாமலிருந்தும் முகம்மாத்திரம் மிகத்தெளிவாயிருந்த தம்மகளை முத்தமிட்டு, அவ்விடத்துக்கு ஒருவரும் வரக்கூடாதென்று ஆணையிட்டு வேறிடத்திற் குடிபுகுந்தார்கள். அவ்விடத்தைவிட்டு அவர்கள் அப்புறம் வந்ததும் புலி கரடி முதலிய காட்டுமிருகங்களும் நுழையக்கூடாதபடி மரங்களும் முட்செடிகளும் முளைத்துப் பெருங்காடாகி அந்த அரமனையைச் சூழ்ந்துகொண்டன. ராஜகன்னிகை படுத்திருந்த மாளிகையின் கோபுரம்தவிர மற்றொன்றும் வெளியிலிருந்து பார்ப்போர்கண்ணுக்குப் புலப்படவில்லை.

இவ்வாறு வெகுகாலஞ்சென்றது; அப்பெண்ணின் செய்திகூட வெகுவாய் மறந்துபோயிற்று. வேறு சந்தானமுண்டாகாமலே அந்த ராஜாவும் ராணியும் இறந்துபோனார்கள். பின்பு அத்தேசத்தை ஆள வந்த ராஜாக்களிலும் இரண்டு மூன்று தலைமுறையாய்விட்டது. இப்படியிருக்க, ஒருநாள் ஒரு ராஜகுமாரன் வேட்டையாடிக்கொண்டுவருகையில் இந்தப் பெருங்காட்டை வந்துபார்த்து: இதென்னவென்று அங்கிருந்தவர்களைக் கேட்க, யாவரும் நாங்கள் அறியோமென்றார்கள். கடைசியில் ஒரு கிழவன்: அப்பா ராஜகுமாரனே! நான் வாலிபனாயிருக்கும்போது என் பாட்டனார் என் தந்தைக்கு ஒரு கதை சொல்லக்கேட்டிருக்கிறேன். இந்தக் காட்டுமத்தியில் ஒரு ராஜகன்னிகை படுத்துத் தூங்குவதாயும், ஒரு நூற்றாண்டுக்குப்பின் ஒரு ராஜகுமாரன் அவளைக்கண்டு கலியாணம் செய்துகொள்வான் என்பதாயும் சொல்லியிருக்கிறார் என, ராஜகுமாரன்: அந்த அற்புதத்தைக் காணவேண்டுமென்கிற ஆவல் உள்ளவனாய் அக்காட்டில் நுழைந்தான். அங்கிருந்த மாஞ்செடி முதலியவெல்லாம் அவனுக்குமாத்திரம் உள்ளே செல்ல வழிவிட்டன. ராஜகுமாரன் வழியில் அநேகங்குதிரைகளும், உயர்ந்த ஆடையாபரணங்கள் அணிந்த காவலாள்களும், அநேகம் கனவான்களும் அதிகாரிகளுமாய்த் தூங்கப் பார்த்துக்கொண்டே சென்றான். எங்கும் ஒரு தூசாவது ஒட்டடையாவது அவன் கண்ணுக்கு அகப்படவில்லை. கடைசியில் அந்த அழகிற்சிறந்த பவழக்கொடியான பெண்ணரசி படுத்திருக்கும் இடம்வந்து காலடியோசைப்படாமல் அவள் அருகே சென்றான். சிலர் அவளை முத்தமிட்டுக்கொண்டான் என்கிறார்கள். அதைக் கண்டவர்கள் யார்? முன் சாபமிட்டிருக்கிறபடி நூறுவருஷமாய்விட்டபடியால் அக்கன்னிகை விழித்துக்கொண்டு உடனே ராஜகுமாரனைப்பார்த்து: ஓ! நீர்தானா, என் ராஜகுமாரனே. வெகுநாளாய் உமக்காக நான் காத்திருக்கிறேனே என்று சொன்னாள்.

அவள் பேசின பேச்சையும், சொல்நயத்தையுங் கேட்டு அந்த ராஜகுமாரன் களிப்படைந்து, தன் உயிரைவிட அவளையே மேலாக நினைத்திருப்பதாய்ச் சொன்னான். ஆயினும் அவ்விருவர்களில் ராஜகுமாரனுக்கு இதென்ன புதுமையென்று மனது மிகவும் சஞ்சலமாயிருந்தது. ஏனெனில், தேவதையின் கிருபையினால் ராஜகன்னிகை தான் தூங்கிக்கொண்டிருந்த நூறுவருஷமும் இந்த ராஜகுமாரனைப்பற்றிக் கனவுகண்டுகொண்டிருந்தாள். அவனோ இதுவரையில் அவளைப்பற்றி ஒன்றுங் கேள்வியுற்றதில்லை. அவர்களிருவ

ரும் வெகுநேரம் அந்நியோன்னியமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு பேசியும் அவர்களுக்குத் திருப்தியுண்டாகவேயில்லை. அப்படியிருக்க, அந்த ராஜகுமாரியோடு கூடவே மயக்கந் தெளிந்து எழுந்த ஒரு நாய்க்குட்டி, அவள் முன்போல் பக்ஷமாய்த் தன்னை எடுத்து ஆதரியாததுபற்றி, அவர்கள் பேச்சுக்கு இடையூறு செய்யத் தலைப்பட்டது.

அங்கே ஆகாரமில்லாமல் நூறுவருஷகாலமாய் நித்திரைசெய்துகொண்டிருந்த சேவகர்களெல்லாம் எழுந்து பசியால் வருந்துவதுகண்டு அவர்களிருவரும் வேண்டுமளவு யாவர்க்கும் விருந்து அளிக்கக் கட்டளையிட்டுத் தாங்களும் பசிதீரப் புசித்தார்கள்: பின்பு பதினெட்டு வாத்தியங்களும் முழங்க வெகு கோலாகலமாய் அவ்விருவர்க்கும் கலியாணம் நடந்தேறிற்று. மணமகனைவிட மணமகள் நூறுவயது பெரியவளாயிருந்தாலும் அந்த வேறுபாடு ஒருவராலுங் கண்டறியக்கூடாமலிருந்தது. விவாஹமான சிலநாள் வரையில் அவ்வரமனையிலேயே இருந்து பிறகு அவ்விடம்விட்டு வெளியேவந்தார்கள். வந்தவுடன் அங்கிருந்த காடுசெடியெல்லாம் மறைந்துபோயின. அதன்பிறகு முன் அந்தப் பெண்மணிக்கு ஞானோபதேசஞ்செய்த தேவதைகளைப்பற்றி ஒரு செய்தியும் தெரியாது. சிலநாளானபின்பு அப்பெண்ணுக்கு நேரிட்ட சாபமுதலிய பழங்கதைகளைச்சொன்னால் ஒருவரும் உண்மையென்று நம்புகிறதேயில்லை. அந்த அழகியும் தான் முன் தேவதைகளிடத்தினின்றும் விசேஷமான அனுக்கிரகம் பெற்றபடி மகா மகிமையடைந்தவளாய் ராஜகுமாரனோடு நெடுநாள் சிறப்புற்று வாழ்ந்திருந்தாள். ✓

சமாசாரம்.

சென்னையில் சக்கரவர்த்தினிப்பட்ட விளம்பரபத்திரப் பிரதிஷ்டை.— சென்ற திங்கட்கிழமை கடற்கரை மைதானம் ஆனந்தபூமி எனத் தகுமாறு விளங்கியது. மன்ரோ பிரதிமைக்குச் சமீபத்தில் விசித்திரமான மேடை ஒன்று கட்டி எழுப்பிச் சோடிக்கப்பட்டிருந்தது. அது சமயம் அறிந்து, சிற்பிகளிற் சிறந்த நிபுணராகிய மெஸ். சிஸம் நிர்மாணிப்பித்தது. அது இரண்டு உறுப்புள்ளது: மேடையும் படிக்கட்டும். மேடை நீளம் 140 அடி, அகலம் 20, உயரம் 35. இதன் சிகரமும் பிற்பக்கமும் வெளிதோன்றாது வேய்ந்திருந்தன. பலவர்ணத்தில் பணிக்காய்ச் சித்திரம் தீட்டியிருந்தது. கொடிகள் ஏற்றியிருந்தன. துவஜஸ்தம்பங்கள் நாற்பது. மேடையில் ஐந்நூறு ஜனம் இருக்க இடம் வகுத்திருந்தது. படிக்கட்டில் ஆயிரம்பெயருக்கு வசதி செய்திருந்தது. இதன் எதிரில் நூறடி உயர்ந்த

துவஜஸ்தம்பம் ஒன்று நாட்டியிருந்தது. பிற்பகல் நாலுமணிக்குமுன் வெகு பெயர் கூடினர். மேடையில் ஹைகோர்ட்டு நீதியதிபர்களும் தேசிகரும் அவரவர்க்குரிய அங்கி தரித்திருந்தார்கள். ராணுவசிக்ஷை மைதானத்தில் போலீஸ் சேவகர் ஜன அமரிக்கை காத்தார்கள். கூடிய கும்பு வரவர அதிகரித்தது. மூன்றரை மணியளவில் பீரங்கிவண்டிகள் மைதானத்திற் சேர்ந்தன. அடுத்துப் பட்டாளத்தார் கூடினர். 67— வது பட்டாளம் கடைசியிற்போய்ச் சேர்ந்தது. மேடைக்கு எதிர்முகமாய்ச் சேனுவீரர் அணிவகுத்து நின்றார்கள். முதல் நிரைக்கும் பீடத்திற்கும் தூரம் இருநூறு கஜம். இருபக்கமும் பீரங்கிவண்டிகள் சேர்ந்தன. அவ்வண்டிகளின் இடப்புறத்தில் பல்லாவரத்தினின்று வந்த சேனுவீரர். அடுத்து 67வது பட்டாளத்தார். அப்பால் இரண்டு சுதேசகாலாட்பட்டாளம். அவர்களுக்குப் பின் தன்னிஷ்ட காவல்வீரரும், சுதேச காலாட்பட்டாளம் இரண்டும். தளபதியும் பரிஜனமும் வந்து சேர்ந்தது நாலுமணிக்குச் சற்று முந்தி. தளபதி வாகனம் விட்டிறங்கிப் படிக்கட்டேறி வீற்றிருந்தார். மந்திராலோசனைச்சபையின் சிரேஷ்ட அவயவமாகிய ஸ்திரி வில்யம் ராபின்ஸன் தேவியார் சகிதம் திட்டமாய் நாலுமணிக்கு வந்து சேர்ந்து, சில நிமிஷம் சென்று எக்காளம் தொனிக்க உத்தரவுசெய்தார். அதன்பின் சிரேஷ்டலிகிதர் மெஸ். ஹட்ல்ஸ்டன் விளம்பரபத்திரம் வாசித்தார். அதன் சங்கிரகத்தை முன் இரண்டொருமுறை குறிப்பித்ததனுல், மீளவும் வெளியிடாது நிறுத்திவிடுகிரும். பத்திரம் வாசித்து முடிந்தபின், மீளவும் எக்காளம் தொனிக்க, சக்கரவர்த்தினி துவஜம் ஏற்றப்பட்டது. ராணுவகீத வகுப்பார் உல்லாசத்துடன் கீதவாத்திய விநோதம்செய்தார்கள். பீரங்கி வெடிகள் தீர்ந்தன. காலாள்வீரர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள். நூற்றொரு பீரங்கிவெடி 34, 34, 33- ஆக விட்டு விட்டுத் தீரப்பட்டன. மருந்து குறைத்துக் கெட்டித்ததனுல் வெடி மிகவும் அதிர்ச்சியாகத் தீரவில்லை. அதன்பின் ஸ்திரி வில்யம் ராபின்ஸன் சற்று முந்திச்சென்று நின்று, பின்வருமாறு மொழிந்தார்.

இப்பொழுது நீங்கள் கண்ட பிரதிஷ்டை வீண் அலங்காரக் காட்சியல்ல; உங்கள் சுதந்தரங்களையும் உரிமைகளையும் அபகரிக்கும் தாற்பரியமுள்ளதல்ல; இவை உங்கள் நெஞ்சில் அழுந்தச்சொல்லும்படி இந்திய ராஜபிரதிநிதி உத்தரவு பிறந்தது. மஹாராணியாரவர்கள் நூதனபட்டம் சூடியது நூதன அதிகாரத்தையும் நூதன சுதந்தரங்களையும் நாடியல்ல; பிரஜாக்ஷேமமே அவர்கள் தாற்பரியம். பிரஜைகள்மீது மனநட்பே அவர்கள் பிரீதி. சக்கரவர்த்தினிப் பட்டமும், அதைச்சேர்ந்த பிரதிஷ்டைகளும் தொன்றுதொட்டுள்ள மனநட்பை வெளியிடும் சின்னங்கள். இந்த நட்பு இதற்குமுந்தி இத்தனை பிரத்தியக்ஷமாய் வெளிவரவில்லை என்று படித்ததுமன்றி, இனி ராஜாங்ககாரியத்தில் நல்ல யோக்கியதையுடைய சுதேசிகளை விசேஷமாய் சேர்த்துக்கொள்ளலாகும் என்றும் குறிப்பித்தார்.

திங்கள்கிழமை இராத்திரி துரைத்தன விருந்துமண்டபத்தில் பெரியோர் தரிசனைக்கூட்டம் கூடியது. உயர்தரத்து உத்தியோகஸ்தர் திரளாய்க் கூடினர். ஒருவாறு தீபாலங்காரம் செய்யப்பட்டது. சமயோசிதமாய் யாவும் அழகுற முடிந்தன.

Printed at tho C. K. S. Press.

SHOOTING A LION.

சிங்கவேட்டை.